# 1 தெசலோனிக்கேயர் 5

## நவீன மொழிபெயர்ப்பாளர்களின் பகுதிப்பகுதியான பிரிவுகள்

| USB[4] | NKJV | NRSV | TEV | NJB |
|---|---|---|---|---|
| கர்த்தருடைய வருகை | கர்த்தருடைய நாள் | கர்த்தருடைய வருகையைப் பற்றிய கேள்விகள் | கர்த்தருடைய வருகைக்கு தயாராக இருங்கள். | கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்கும் போதான விழிப்புணர்வு |
| (4:13-5:11) | | (4:13-5:11) | | |
| 5:1-11 | 5:1-11 | 5:1-11 | 5:1-11 | 5:1-3<br>5:4-11 |
| இறுதி அறிவுரைகள் மற்றும் வாழ்த்துக்கள் | பல்வேறு அறிவுரைகள் | இறுதி அறிவுரைகள் | இறுதி வழிமுறைகள் மற்றும் வாழ்த்துக்கள் | |
| 5:12-15 | 5:12-22 | 5:12-22 | 5:12-13 | 5:12-13a<br>15:13b |
| | | | 5:14-15 | 5:14-18 |
| 5:16-22 | | | 5:16-18 | |
| | | | 5:19-22 | 3:11-13 |
| | ஆசீர்வாதம் மற்றும் அறிவுரை | | | இறுதி ஜெபம் மற்றும் பிரியாவிடை |
| 5:23-24 | 5:23-28 | 5:23-24 | 5:23-24 | 5:23-24 |
| 5:25 | | 5:25 | 5:25 | 5:25 |
| 5:26-27 | | 5:26-27 | 5:26 | 5:26-27 |
| | | | 5:27 | |
| 5:28 | | 5:28 | 5:28 | 5:28 |

### வாசிப்பு சுழற்சி 3 (சிறந்த வேத வாசிப்புக்கான வழிகாட்டலிலிருந்து)

*பந்திபந்தியான பிரிவுகளின் அடிப்படையில் எழுத்தாளரின் உண்மையான நோக்கத்தை அறிதல்*

இது ஒரு கற்றல் வழிகாட்டல் விளக்கவுரை. அதாவது, வேதாகமத்திற்குரிய உங்களுடைய தனிப்பட்ட பொருள் விளக்கத்துக்கு நீங்களே பொறுப்பாளர்கள். நம்மோடிருக்கும் வெளிச்சத்தோடு நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாக நடக்க வேண்டியது அவசியம். நீங்களும், வேதாகமமும் பரிசுத்த ஆவியும்

பொருள்விளக்கத்துக்கு இன்றியமையாதவர்கள். நீங்கள் இதனை விளக்கவுரையாளருக்கு விட்டுவிட முடியாது.

முழு அதிகாரத்தையும் ஒரே அமர்வில் வாசிக்கவும். விடய பிரிவுகளை இனங்கண்டுக்கொள்ளுங்கள். மேற்கூறப்பட்ட ஐந்து மொழிப்பெயர்ப்புக்களுடனும் உங்களுடைய விடய பிரிவுகளை ஒப்பிட்டுப்பாருங்கள். பகுதிப்பகுதியான பிரிவுகளானது வெளிப்பாடாயில்லாவிட்டாலும் மொழிப்பெயர்ப்பின் ஆதாரமாகிய எழுத்தாளருடைய நோக்கத்தினை புரிந்துக்கொண்டு பின்தொடருவதற்கான திறவுகோலாய் இருக்கிறது. ஒவ்வொரு பந்தியும் ஒரே ஒரு விடயத்திளை உள்ளடத்தியே காணப்படுகின்றது.

1. முதலாவது பந்தி
2. இரண்டாவது பந்தி
3. மூன்றாவது பந்தி
4. போன்றவை.

**1-22 வசனங்களுக்கான சூழ்நிலை சார்ந்த நுண்ணறிவு**

1. 1 தெச. 4: 1-11 உடன் 1 தெச 4: 4: 13-18 நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. இதேபோன்ற முடிவை 1 தெச 4:18 மற்றும் 5:11 இல் கவனியுங்கள். இந்த பகுதிகள் போதகத்துவ முன்னுரிமையைப் பெறுகின்றன. அவர்களின் சூழலமைவு நோக்கம் ஆறுதலளிப்பதற்கே தவிர, கோட்பாட்டைக் கொடுப்பதல்ல, அப்படி இருந்தபோதிலும் பவுல் செய்தார்.
2. இது இரண்டாவது வருகையைப் பற்றிய கலந்துரையாடலைத் தொடர்கிரதோடு, மேலும் கர்த்தருடைய சீக்கிரமாக நிகழப்போகும் வருகையின் வெளிச்சத்தில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழ வேண்டும்என்பதையும் அறிவுறுத்துகிறது.
3. 1 தெச 4: 13-22 இல் பதினைந்து நிகழ்கால வேண்டுகோள் நிலை வாக்கியங்கள் உள்ளன, அவை கடைசிகால நிகழ்வுகளின் வெளிச்சத்தில் விசுவாசிகள் கோரும் தற்போதைய வாழ்க்கை முறை பண்புகளைப் பற்றி பேசுகின்றன

.

**சொல் மற்றும் சொற்றொடர் ஆய்வு**

| **NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 5:1-11** |
|---|
| **[1]சகோதரர்களே, இப்போது காலங்களையும் சகாப்தங்களையும் பொறுத்தவரை, உங்களுக்கு எதையும் குறித்து எழுதப்பட வேண்டுவதில்லை. [2] இரவில் திருடனைப் போலவே கர்த்தருடைய நாளும் வரும் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். [3] " சமாதானமும் சவுக்கியமும்!"  உண்டென்று அவர்கள் சொல்லுகின்றப் போது குழந்தையுடன் ஒரு பெண்ணுக்கு பிரசவ வேதனை எற்படுவதுப் போல திடீரென அழிவு அவர்கள் மீது வரும், அவர்கள் தப்பிப்போவதில்லை. [4]சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக நீங்கள் அந்தகாரத்தில் இருக்கிறவர்கள். அல்லவே. [5] நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளாய்** |

**இருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. [6.] ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், எச்சரிக்கையாகவும் தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம். [7] தூங்குபவர்கள் இரவில் தூக்கம் செய்வார்கள், வெறிகொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள். [8] நாம் பகலுக்குரியவர்களாய் இருபதால் தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவாம். [9]தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று குறிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று குறித்தார். [10] நமக்காக யார் இறந்தார்கள், அதனால் நாம் விழித்திருந்தாலும் தூங்கினாலும் அவருடன் சேர்ந்து வாழ்வோம். [11] ஆகையால், நீங்களும் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி, ஒருவரையொருவர் கட்டியெழுப்புங்கள்.**

**5:1 "இப்போது"** இரண்டாவது வருகையைப் பற்றிய விபரம் தொடர்கிறது, ஆனால் நிகழ்வின் ஒரு புதிய அம்சமாக அவிசுவாசிகளின் நியாயத்தீர்ப்பு அணுகப்படுகிறது.

| | |
|---|---|
| **NASB** | **"காலங்களையும் சகாப்தங்களையும்"** |
| **NKJV, NRSV** | **"காலங்களையும் சமயங்களையும்"** |
| **TEV** | **"காலங்களையும் சந்தர்ப்பங்களையும்"** |
| **NJB** | **"காலங்களையும் சமயங்களையும்"** |

விசுவாசிகள் குறிப்பிட்ட காலங்களைத் தேடாமலிருக்கும் போதிலும் (ஒ.பா. மத் 24:36), அவர்கள் வரலாற்றின் போக்குகளை கண்டறிய வேண்டும் (ஒ.பா. அப்போஸ்தலர் 1: 7; மத் 24: 32-33). "நேரம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க சொல் *chronōn,* "எவ்வளவு காலம்?" என்றக் கேள்விக்குப் பதிலளிக்கிறது இது காலம் கடந்து செல்வதைப் பற்றி பேசுகிறது. ஆங்கில சொல்லான *"chronology"* (காலவரிசை) என்ற ஆங்கில வார்த்தை இந்த கிரேக்க மூலத்திலிருந்து பெறப்பட்டது. "சகாப்தங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட *Kairōn,* "எப்போது?" என்றக் கேள்விக்குப் பதிலளிக்கிறது. இது சிறப்பு நிகழ்வுகளைப் பற்றி பேசுகிறது.

▣ **"சகோதரர்களே"** பவுல் ஒரு புதிய விஷயத்திற்கு செல்வதைக் குறிக்க இப் பதத்தை அடிக்கடிப் பயன்படுத்துகிறார் (பார்க்க 4: 1).

▣ **"உங்களுக்கு எதையும் குறித்து எழுதப்பட வேண்டுவதில்லை."** பவுலால் இரண்டாவது வருகையைப் பற்றிய விரிவான மற்றும் நீண்டகால தகவல்களை அவர்களுக்கு வழங்க முடியவில்லை. அவர் தெசலோனிகாவில் ஒரு குறுகிய காலம் மட்டுமே தங்கியிருந்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் அவர் இந்த விஷயத்தைப் பல முறை பிரசங்கித்திருக்க வேண்டும். தெசலோனிக்க விசுவாசிகள் இறுதி கால நிகழ்வுகளின் அனைத்து அம்சங்களையும் நன்கு புரிந்து கொண்டதாக இந்த சொற்றொடர் அர்த்தப்படுத்தவில்லை, ஆனால் ஆவியானவர் அவர்களை வழிநடத்தி தேவையான பகுதிகளை அறிவிப்பார் (ஒ.பா. யோவான் 14:26; 16:13; 1 யோவான் 2: 20,27) குறிப்பாக இந்த சத்தியங்கள் (1) சுவிசேஷம், (2) கிறிஸ்தவ வாழ்க்கை போன்றவற்றுடன் தொடர்புடையவை. மற்ற சாத்தியமான சந்தர்ப்பம் என்னவென்றால், இது எரே 31: 31-34-ன் புதிய உடன்படிக்கையை குறிக்கிறது,

குறிப்பாக 1 தெச. 5: 33-34. விசுவாசிகள் தேவனை நெருங்கி தனிப்பட்ட வழிகளில் அறிந்துகொள்வதன் மூலம் நீதியின் புதிய யுகம் வகைப்படுத்தப்படுகிறது. அவர்களுக்கு ஒரு ஆசிரியர் தேவையில்லை, ஏனென்றால் தேவன் தம்முடைய வார்த்தையை ஆவியின் மூலமாக அவர்கள் இருதயங்களில் எழுதியுள்ளார்.

**5:2 "கர்த்தருடைய நாளும்"** தேவன் அல்லது அவருடைய மேசியா வரலாற்றை பிரித்து மாற்றியமைத்து நீதியின் புதிய யுகத்தை அமைப்பதனை குறிக்கும் ஒரு பழைய ஏற்பாட்டு சொற்றொடருடன் ஒத்திருக்கிறது (ஒ.பா. யோவேல் 1:15; 2: 11,31; ஆமோஸ் 5:18; ஏசா. 2:12). தேவனின் வருகை பழைய ஏற்பாட்டில் ஆசீர்வாதத்திற்காகவோ அல்லது நியாயதீர்ப்பிற்காகவோ இருக்கலாம். இது விசுவாசிகளுக்கு இரட்சிப்பின் உச்சமாகவும், ஆனால் அவிசுவாசிகளுக்கு நியாயதீர்ப்பின் நிறைவாகவும் இருக்கும்.

பவுலின் எழுத்துக்களில் மனிதர்கள் இயேசுவை (இரட்சகராக அல்லது நியாதிபதியாக) சந்திக்கும் ஒரு வரவிருக்கும் சிறப்பான நாளைக் குறித்த இறுதியியல் முக்கியத்துவம் நிறைந்த வசனம் பல பெயர்களால் காண்பிக்கப்படுகிறது:

1. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாள்" (ஒ.பா. 1 கொரி. 1: 8)
2. "கர்த்தருடைய நாள்" (ஒ.பா. 1 கொரி. 5: 5; 1 தெச. 5: 2; 2 தெச. 2: 2)
3. "கர்த்தராகிய இயேசுவின் நாள்" (ஒ.பா.2 கொரி. 1:14)
4. "இயேசு கிறிஸ்துவின் நாள்" (ஒ.பா. பிலி. 1: 6)
5. "கிறிஸ்துவின் நாள்" (ஒ.பா. பிலி. 1:10; 2:16)
6. "அவருடைய நாள் (மனுஷகுமாரன்)" (ஒ.பா. லூக்கா 17:24)
7. "மனுஷகுமாரன் வெளிப்படும் நாள்" (ஒ.பா. லூக்கா 17:30)
8. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுதல்" (ஒ.பா. 1 கொரி. 1: 7)
9. "கர்த்தராகிய இயேசு பரலோகத்திலிருந்து வெளிப்படும் போது" (ஒ.பா. 2 தெச. 1: 7)
10. "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே" (ஒ.பா.1 தெச. 2:19)

பழைய ஏற்பாட்டில் எழுத்தாளர்கள் இரண்டு காலங்களைக் கருத்தில் கொண்டார்கள், முதலாவது ஒரு தீமை நிறைந்த காலம் மற்றயது நீதியின் வரவிருக்கும் காலம், ஆவியின் காலமாகும். தேவன் தனது மேசியா மூலம் இந்த புதிய காலத்தை அமைப்பதற்கு வரலாற்றில் தலையிட்டார். இந்த நிகழ்வு "கர்த்தருடைய நாள்" என்று அழைக்கப்பட்டது. "புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இதை கிறிஸ்துவுக்கு இலக்கணப்படுத்தியத்தைக் கவனிக்கமுடியும். அவரது முதல் வருகை, மனுவுரு, பல பழைய ஏற்பாட்டு நூல்களில் முன்னறிவிக்கப்பட்டது. யூதர்கள் ஒரு தெய்வீக நபரை எதிர்பார்க்கவில்லை, ஒரு தெய்வீக தலையீட்டை மட்டுமே எதிர்பார்த்தனர். மேசியாவின் இரண்டு வருகைகள், ஒன்று பாடுப்படும் தாசன் மற்றும் மீட்பர், மற்றயது நியாயாதிபதி மற்றும் கர்த்தர் ஆகும், இது பழைய ஏற்பாட்டு மக்களுக்கு தெளிவாகத் தென்படவில்லை. சிறப்பு தலைப்பு: கலா 1: 4 ல் உள்ள இரண்டு காலங்கள் - பார்க்கவும்.

▣ **"இரவில் திருடனைப் போலவே வரும்"** இது எதிர்காலமாகப் பயன்படுத்தப்பட்ட நிகழ்கால வாக்கியமாகும். இந்த "எந்த நேரமும்" திரும்புவது புதிய ஏற்பாட்டில் ஒரு தொடர்ச்சியான கருப்பொருள் ஆகும் (ஒ.பா. மத் 24: 42-44; 25:13; லூக்கா 12: 40,45; 21: 34-36; 2 பேதுரு 3:10; வெளி. 3: 3; 16:15). சிறப்பு தலைப்பைக் காண்க. 1 தெச. 4:15.

யாத்திராகமத்தின் சங்கார தூதனைப் போல மேசியா நள்ளிரவில் பஸ்கா பண்டிகையன்று வருவார் என்று ஒரு யூத மரபு இருந்தது.

**5:3 "" சமாதானமும் சவுக்கியமும்!" உண்டென்று அவர்கள் சொல்லுகின்றப் போது "** இது எரேமியாவின் நாளின் கள்ள தீர்க்கதரிசிகளின் செய்தியாகும் (ஒ.பா. எரே. 6:14; 8: 11,28). தேவனின் தலையீட்டிற்கு முன் மனித வாழ்க்கையும் சமூகமும் சாதாரணமாகத்

தோன்றும் (ஒ.பா. மத் 24: 37-38; லூக்கா 17: 26-27). அவர்கள் மேசியாவை எதிர்பார்க்க மாட்டார்கள்.

புதிய ஏற்பாட்டில் இரண்டாவது வருகைக்கு முன்னர் கடுமையான துன்பங்கள் இருக்கும் என்பதே முக்கிய வலியுறுத்தலாகும். (ஒ.பா. மத் 24:21; மாற்கு 13: 19-20).

▣ **"திடீரென அழிவு அவர்கள் மீது வரும்"** இந்த பத்தியில் "அவர்கள்" (1 தெச 5: 3) மற்றும் "சகோதரர்கள்" (1 தெச 5: 4) எனும் பதங்கள் கடுமையாக முரண்படுகிறது. இந்த அழிவு நிர்மூலமாக்கலைக் குறிக்கவில்லை, ஆனால் தேவனின் நியாயத்தீர்ப்பிற்கான வேதாகம உருவகமாகும் (ஒ.பா. 2 தெச 1: 9; தானி 12: 2).

"திடீரென்று" எனும் பதம் இங்கேயும் இயேசுவின் ஒலிவமலை சொற்பொழிவு பற்றிய லூக்காவின் கணக்கிலும் மட்டுமே காணப்படுகிறது (ஒ.பா. லூக்கா 21:34). இது திடீர் மற்றும் எதிர்பாராத நிகழ்வைக் குறிக்கிறது.

▣ **"பிரசவ வேதனைகள்"** நியாயதீர்ப்பின் இந்த பழைய ஏற்பாட்டு உருவகம் (ஒ.பா. ஏசா. 13: 6-8; எரே. 4:31) ஒரு புதிய ஏற்பாட்டு உருவகமாக இங்கு மாறியது (உதாரணமாக, புதிய காலத்தின் கர்ப்ப வேதனை, ஒ.பா. மத். 24: 8; மாற்கு 13: 8; ரோமர் 8:22).

இது ஒரு நிகழ்வின் திடீர் தன்மை மற்றும் நிச்சயம் அதே மாதிரி கடுமையான வேதனை ஆகியவற்றைப் பற்றி பேசுகிறது.

**NASB "அவர்கள் தப்பிப்போவதில்லை"**
**NKJV "அவர்கள் தப்பிப்போவதில்லை"**
**NRSV "மற்றும் தப்பிக்க முடியாது"**
**TEV "அவர்கள் தப்பிக்க மாட்டார்கள்"**
**JB "மேலும் இதைத் தவிர்ப்பதற்கு யாருக்கும் வழி இருக்காது"**

இது ஒரு உறுதியான இரட்டை எதிர்மறையாகும்: "ஒருபோதும், இல்லை, எந்த சூழ்நிலையிலும் இல்லை."

**5:4 "சகோதரரே, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே;"** கடைசிக் கால நிகழ்வுகளின் அடிப்படை வெளிப்பாடுகளை நாம் பார்த்தோமானால் - தேவன் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலமாயும், மற்றும் இயேசு புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் மூலமாயும் தன்னை வெளிப்படுத்தியுள்ளார், அதனால் உயிருடன் இருக்கும் விசுவாசிகள் என்ன நடக்கிறது என்று ஆச்சரியப்பட மாட்டார்கள். இந்த வாழ்க்கையின் கஷ்டமான சூழ்நிலைகள் மற்றும் கடைசிக் கால உபத்திரவ காலங்களுக்கு மத்தியில் தேவன் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு தைரியத்தை அளித்த ஒரு வழி இதுவாகும்.

இந்த நிகழ்வுகளைப் பற்றி விசுவாசிகளிடையே மீண்டும் மீண்டும் குழப்பம் ஏற்படுவதற்கான ஒரு காரணம் என்னவென்றால், ஒவ்வொரு தலைமுறை விசுவாசிகளும் இந்த நிகழ்வுகளை தங்கள் வரலாற்றில் கட்டாயமாக உட்புகுத்த முயன்றனர்.

**SPECIAL TOPIC: OLD TESTAMENT PREDICTIONS OF THE FUTURE VS. NEW TESTAMENT PREDICTIONS ("CRUCIAL INTRODUCTION" TO REVELATION)**
**தலைப்பு: எதிர்காலத்தின் பழைய ஏற்பாட்டு கணிப்புகள் எதிர் புதிய ஏற்பாட்டு கணிப்புகள் (வெளிப்படுத்தல் விசேஷத்தின் "முக்கியமான அறிமுகம்")**

இறுதியியல் பற்றிய எனது ஆய்வின் ஆண்டுகளில், பெரும்பாலான

கிறிஸ்தவர்களுக்கு ஒழுங்கான, முறையான, இறுதி நேர காலவரிசை பட்டியல் இல்லை அல்லது தேவைப்படுவதில்லை என்பதை நான் அறிந்திருக்கிறேன். முக்கியமாக சில கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தின் இந்த பகுதியில் இறையியல், உளவியல், அல்லது மத பிரிவு ரீதியான காரணங்களுக்காக கவனம் செலுத்துகின்றனர். இந்த கிறிஸ்தவர்கள் எல்லாம் எப்படி இவைகள் முடிவடையும் என்பதில் ஆர்வம்காட்டுகிறார்கள், சுவிசேஷத்தின் அவசரத்தை எப்படியோ விட்டுவிடுகிறார்கள்! தேவனின் இறுதியியல் (இறுதி கால) நிகழ்ச்சி நிரலை விசுவாசிகளின் செயல்கள் பாதிக்க முடியாது, ஆனால் அவர்கள் நற்செய்தி ஆணையில் பங்கேற்கலாம் (ஒ.பா. மத் 28: 19-20; லூக்கா 24: 46-47; அப்போஸ்தலர் 1: 8). கிறிஸ்துவின் இரண்டாவது வருகையும், தேவனின் வாக்குறுதிகளின் இறுதி கால உச்சக்கட்டத்தையும் பெரும்பாலான விசுவாசிகள் உறுதிப்படுத்துகிறார்கள். பல வேதாகம முரண்பாடுகளிலிருந்து இந்த தற்காலிக உச்சக்கட்டத்தை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதிலிருந்து எழும் விளக்க சிக்கல்கள் வருகின்றன (சிறப்பு தலைப்பு: வேதத்தில் முரண்பாடு பார்க்கவும்).

1. பழைய உடன்படிக்கை தீர்க்கதரிசன மாதிரிகள் மற்றும் புதிய உடன்படிக்கை அப்போஸ்தலிக்க மாதிரிகள் இடையே பதற்றம்
2. வேதாகமத்தின் ஏகத்துவத்திற்கும் (அனைவருக்கும் ஒரே தேவன்) தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரேலிற்கும் (ஒரு சிறப்பு மக்கள்) இடையிலான பதற்றம்
3. வேதாகம நிபந்தனையுடனான உடன்படிக்கைகள் மற்றும் வாக்குறுதிகளின் அம்சத்திற்கும் ("என்றால் .... பின்னர்") வீழ்ச்சியடைந்த மனிதகுலத்தின் மீட்பிற்கான தேவனின் நிபந்தனையற்ற உபமாய்த்துக்கும் இடையிலான பதற்றம்
4. கிழக்கேத்தய இலக்கிய வகைகளுக்கும் நவீன மேற்கத்திய இலக்கிய மாதிரிகளுக்கும் இடையிலான பதற்றம்
5. தேவனுடைய ராஜ்யத்திற்கு நிகழ்காஸ்திற்குரியதிற்கும் இடையிலான பதற்றம்
6. கிறிஸ்துவின் உடனடி வருகைக்கான நம்பிக்கைக்கும் சில நிகழ்வுகள் முதலில் நடக்க வேண்டும் என்ற நம்பிக்கைக்கும் இடையிலான பதற்றம்.

இந்த பதற்றங்களை ஒரு நேரத்தில் விவாதிப்போம்.

**முதல் பதற்றம்** (பழைய ஏற்பாடு இன, தேசிய மற்றும் புவியியல் பிரிவுகள் எதிர் உலகெங்கிலும் உள்ள அனைத்து விசுவாசிகள்)

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் எருசலேமை மையமாகக் கொண்ட பாலஸ்தீனத்தில் ஒரு யூத ராஜ்யத்தை மீட்டெடுப்பதாக கணித்துள்ளனர், அங்கு பூமியின் அனைத்து நாடுகளும் தாவீதின் வம்சத்தில் வந்த ஆட்சியாளரைப் மகிமைப்படுத்துவதற்கும் அவருக்கு ஊழியம் செய்வதற்கும் எருசலேமில் கூடிவருகின்றனர், ஆனால் இயேசுவோ அல்லது புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களோ இந்த நிகழ்ச்சி நிரலில் ஒருபோதும் கவனம் செலுத்தவில்லை. அவர் பழைய ஏற்பாட்டில் அருளப்படவில்லையா (ஒ.பா. மத் 5: 17-19)? புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் முக்கியமான இறுதி கால நிகழ்வுகளைத் தவிர்த்துவிட்டார்களா?

உலகின் முடிவைப் பற்றிய பல ஆதாரங்கள் உள்ளன.

1. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் (ஏசாயா, மீகா, மல்கியா)
2. பழைய ஏற்பாட்டு வெளிப்படுத்தல் எழுத்தாளர்கள் (ஒ.பா. எசேக்கியேல் 37-39; தானியேல் 7-12; சகரியா)
3. இடைக்கால, நியமனமற்ற யூத வெளிப்படுத்தல் எழுத்தாளர்கள் (ஏனோக்கைப் போல, இது யூதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)
4. இயேசு அவரே (ஒ.பா. மத். 24; மாற்கு 13; லூக்கா 21)
5. பவுலின் எழுத்துக்கள் (ஒ.பா. 1 கொரிந்தியர் 15; 2 கொரிந்தியர் 5; 1 தெசலோனிக்கேயர் 4-5; 2 தெசலோனிக்கேயர் 2)
6. யோவானின் எழுத்துக்கள் (1 யோவான் மற்றும் வெளிப்படுத்துதல்)

இவை அனைத்தும் ஒரு இறுதி கால நிகழ்ச்சி நிரலை (நிகழ்வுகள், காலவரிசை, நபர்கள்) தெளிவாக கற்பிக்கிறதா? இல்லையென்றால், ஏன்? அவை அனைத்தும் அருளப்பட்டவை அல்லவா (யூதர்களின் இடைக்கால எழுத்துக்கள் தவிர)?

ஆவியானவர் பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு விதிமுறைகள் மற்றும் வகைகளில் அவர்கள் புரிந்து கொள்ள முடியும் விதத்தில் சாத்தியங்களை வெளிப்படுத்தினார். எவ்வாறாயினும், முற்போக்கான வெளிப்பாட்டின் மூலம் ஆவியானவர் இந்த பழைய ஏற்பாட்டின் விரிவாக்கக் கருத்துக்களை உலகளாவிய நோக்கத்திற்கு விரிவுபடுத்தியுள்ளார் ("கிறிஸ்துவைப் பற்றிய இரகசியம்," ஒ.பா. எபே 2: 11-3: 13). தொடர்புடைய சில எடுத்துக்காட்டுகள் இங்கே:

1. பழைய ஏற்பாட்டில் உள்ள எருசலேம் நகரம் தேவனின் மக்களுக்கு (சீயோன்) ஒரு உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் மனந்திரும்பிய, விசுவாசமுள்ள மனிதர்கள் அனைவரையும் தேவன் ஏற்றுக்கொண்டதை வெளிப்படுத்தும் ஒரு வார்த்தையாக புதிய ஏற்பாட்டில் திட்டமிடப்பட்டுள்ளது ("புதிய எருசலேம்" வெளிப்படுத்துதல் 21-22). இறையியல் விரிவாக்கமாக ஒரு நேரடி, பௌதீக நகரம், ஆதி. 3: 15-ல் வீழ்ச்சியடைந்த மனிதகுலத்தை மீட்பதாக

தேவன் அளித்த வாக்குறுதியில் தேவனின் புதிய மக்களாக (யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்று நம்புபவர்களுக்கு) முன்னறிவிக்கப்பட்டுள்ளது. ஆபிரகாமின் அழைப்பு கூட (ஒ.பா. ஆதி. 12: 1-3) புறஜாதியாரை உள்ளடக்கியது (ஒ.பா. ஆதி. 12: 3; யாத்திராகமம் 19: 5). சிறப்பு தலைப்பைக் காண்க: YHWH இன் நித்திய மீட்பு திட்டம்.

2. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களின் எதிரிகள் பண்டைய அருகிலுள்ள கிழக்கின் சுற்றியுள்ள நாடுகள், ஆனால் புதிய ஏற்பாட்டில் நம்பிக்கையற்ற, தேவனுக்கு எதிரான, சாத்தானால் ஈர்க்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளனர். போர் புவியியல், பிராந்திய மோதலில் இருந்து உலகளாவிய, அண்ட சராசர மோதலுக்கு (ஒ.பா. கொலோசியர்) நகர்ந்துள்ளது.

3. பழைய ஏற்பாட்டில் மிகவும் ஒருங்கிணைந்த ஒரு நிலத்திரக்கான வாக்குறுதி (ஆதியாகமத்தின் முப்பிதாக்களுக்கான வாக்குறுதிகள், ஒ.பா. ஆதி. 12: 7; 13:15; 15: 7,15,16; 7: 8) இப்போது பூமி முழுவதுமாக மாறிவிட்டது. புதிய ஜெருசலேம் மீண்டும் உருவாக்கப்பட்ட பூமிக்கு வருகிறது, அருகிலுள்ள கிழக்கு மட்டுமல்ல அல்லது பிரத்தியேகமாக அல்ல (ஒ.பா. வெளிப்படுத்துதல் 21-22).

4. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன கருத்துக்கள் விரிவாக்கப்படுவதற்கான வேறு சில எடுத்துக்காட்டுகள்

    1. ஆபிரகாமின் சந்ததி இப்போது ஆவிக்குரிய விருத்தசேதனம் செய்யப்பட்டுள்ளது (ஒ.பா. ரோமர் 2: 28-29)

    2. உடன்படிக்கை மக்கள் இப்போது புறஜாதியரையும் உள்ளடக்கியுள்ளது.

        1. ஓசி. 1:10; 2:23, ரோம. 9: 24-26ல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

        2. லேவி. 26:12; யாத்திராகமம். 29:45, 2 கொரி. 6: 16-18

        3. யாத்திராகமம். 19: 5; உபா. 14: 2, தீத்து 2:14 இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது

    3. இப்பொழுது தேவாலயம் இயேசுவே (ஒ.பா. மத் 26:61; 27:40; யோவான் 2: 19-21) மற்றும் அவர் மூலமாக உள்ளூர் சபை (ஒ.பா. 1 கொரி. 3:16) அல்லது தனிப்பட்ட விசுவாசி (ஒ.பா. 1 கொரி. 6:19)

    4. இஸ்ரவேலும் அதன் சிறப்பியல்பு சம்பந்தமான விளக்கங்களும் பழைய ஏற்பாட்டு சொற்றொடர்களும் இப்போது தேவனின் அனைத்து மக்களையும் குறிக்கின்றன.

        1. "இஸ்ரவேல்," ஒ.பா. ரோம். 9: 6; கால். 6:16

        2. ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்," ஒ.பா.1 பேது. 2: 5, 9-10; வெளி 1: 6)

தீர்க்கதரிசன மாதிரியானது நிறைவேற்றப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டு, இப்போது மேலும் அனைத்தையும் உள்ளடக்கியதாக உள்ளது. இயேசுவும் அப்போஸ்தல எழுத்தாளர்களும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் (ஒ.பா. மார்ட்டின் விங்கார்டன், (Martin Wyngaarden), The Future of The Kingdom in Prophecy and Fulfillment) போல கடைசி காலத்தை முன்வைக்கவில்லை. பழைய ஏற்பாட்டு மாதிரியை மொழியாக்க அல்லது நெறிமுறையாக மாற்ற முயற்சிக்கும் நவீன மொழிப் பெயர்ப்பாளர்கள் வெளிப்படுத்துதல் புத்தகத்தை உயர் யூத புத்தகமாக திருப்பி, இயேசுவின் மற்றும் பவுலின் ஆழமான சொற் கரு, தெளிவற்ற சொற்றொடர்களின் அர்த்தத்தை கட்டாயப்படுத்துகிறார்கள்! புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை மறுக்கவில்லை, ஆனால் அவர்களின் உலகளாவிய இறுதி உட்குறிப்பைக் காட்டுகிறார்கள். இயேசுவின் அல்லது பவுலின் ஒழுங்கமைக்கப்பட்ட இறுதியியல், தர்க்கரீதியான அமைப்பு எதுவும் இல்லை. அவற்றின் நோக்கம் முதன்மையாக மீட்கும் பணி அல்லது மேய்க்கும் பணி (அதாவது, 1 கொரி. 15:58; 1 தெச. 4:18)

இருப்பினும், புதிய ஏற்பாட்டினுள் கூட இவ்வாறான பதற்ற நிலை நிலவுகிறது. இங்கும் இறுதியியல் நிகழ்வுகளின் தெளிவான அமைப்பு ஒன்றும் இல்லை. வெளிப்படுத்துதல் புத்தகம் பல வழிகளில் இயேசுவின் போதனைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இறுதி நிகழ்வுகளை விவரிப்பதில் பழைய ஏற்பாட்டின் குறிப்புகளைப் பயன்படுத்துகிறது (ஒ.பா.  மத்தேயு 24; மாற்கு 13)! இது எசேக்கியேல், தானியல் மற்றும் சகரியா ஆகியோரால் தொடங்கப்பட்ட இலக்கிய வகையைப் பின்பற்றுகிறது, ஆனால் இடைபட்ட காலத்தில் (யூத அபோகாலிப்டிக் இலக்கியம்) உருவாக்கப்பட்டது. பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளை இணைக்கும் யோவானின் வழி இதுவாக இருக்கலாம். இது மனிதனுடைய முரட்டாட்டத்தின் பழைய வடிவத்தையும் மீட்பிற்கான தேவனின் அர்ப்பணிப்பையும் காட்டுகிறது! ஆனால் வெளிப்படுத்துதல் பழைய ஏற்பாட்டு மொழி, நபர்கள் மற்றும் நிகழ்வுகளைப் பயன்படுத்தினாலும், அது முதல் நூற்றாண்டு ரோம் (ஒ.பா. வெளிப்படுத்துதல் 17) நகரின் வெளிச்சத்தில் அவற்றை மறுபரிசீலனை செய்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**இரண்டாவது பதற்றம்** (ஏகத்துவவாதம் எதிராக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்)

வேதாகமம் முக்கியத்துவம் ஒரு தனிப்பட்ட, ஆன்மீக, சிருஷ்டிக-மீட்பர் தேவனை காண்பிக்கின்றது (ஒ.பா. யாத்திராகமம் 8:10; ஏசா. 44:24; 45: 5-7,14,18,21-22; 46: 9; எரே. 10:6-7). பழைய ஏற்பாட்டின் தனித்துவமானது அதன் நாற்களில் இருந்த ஏகத்துவவாதமாகும் (சிறப்பு தலைப்பு: ஏகத்து வழிபாட்டைப் பார்க்கவும்). சுற்றியுள்ள அனைத்து நாடுகளும் பல்-இறை வழிபாட்டு வாதிகள். பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டின் மையமாக தேவனின் ஏகத்துவம் காணப்பட்டது. (ஒ.பா.  உபா. 6: 4). சிருஷ்டிப்பு என்பது தேவனுக்கும் அவருடைய சாயலிலும், ரூபத்திலும்

உருவாக்கப்பட்மனிதர்களுக்கும் இடையிலான ஐக்கிய நோக்கத்திற்கான ஒரு கட்டமாகும். (ஒ.பா. ஆதி .1: 26-27). இருப்பினும், மனிதகுலம் கலகம் செய்து, தேவனின் அன்பிற்கு, தலைமையிற்கு மற்றும் நோக்கத்திற்கு எதிராக பாவம் செய்தது (ஒ.பா. ஆதியாகமம் 3). தேவனின் அன்பும் நோக்கமும் மிகவும் வலுவானது மற்றும் வீழ்ச்சியடைந்த மனிதகுலத்தை மீட்பதாக அவர் உறுதியளித்தார் (ஒ.பா. ஆதி. 3:15, சிறப்புத் தலைப்பைப் பார்க்கவும்: YHWH இன் நித்திய மீட்பு திட்டம்)!

இந்தப் பதற்றம் ஒரு மனிதனை, ஒரு குடும்பத்தை, ஒரு தேசத்தை தேவன் தெரிந்து அதனை அனைத்து மனிதகுலத்தினையும் அடைய தேர்ந்தெடுக்கும் போதே எழுகிறது. தேவன் ஆபிரகாமை தெரிந்தமையும் (ஒ.பா. ஆதியாகமம் 12; 15; 17; 18) மற்றும் யூதர்கள் ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாக தெரிந்தமையும் (ஒ.பா. யாத்திராகமம் 19: 4-6) பணிக்கு பதிலாக பெருமையை ஏற்படுத்தியது, சேர்ப்பதற்கு பதிலாக விலக்குவதற்கு ஆனது. தேவன் ஆபிரகாமை அழைத்ததில் எல்லா மனிதர்களுக்கும் உரித்தான ஆசீர்வாதம் இருந்தது (ஒ.பா. ஆதி. 12: 3). பழைய ஏற்பாட்டுத் தேர்வு இரட்சிப்புக்காக அல்ல, சேவைக்காக என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அனைத்து இஸ்ரவேலருக்கு ஒருபோதும் தேவனோடு சரியாக நடக்கவில்லை, அவளுடைய பிறப்புரிமையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒருபோதும் நித்தியமாக இரட்சிக்கப்படவில்லை (ஒ.பா. யோவான் 8: 31-59; மத் 3: 9), ஆனால் தனிப்பட்ட விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலால் (ஒ.பா. ஆதி. 15: 6 ரோமர் 4: 3,9,22; கலா. 3: 6) இரட்சிக்கபட்டார்கள். இஸ்ரவேல் தனதுதூர நோக்கு அல்லது பணியை இழந்தது (சபை இப்போது ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், ஒ.பா. வெளி. 1: 6; 1 பேதுரு 2: 5,9) மற்றும் ஆணையை சலுகையாகவும், சேவையை ஒரு சிறப்பு நிலையாகவும் மாற்றியது! தேவன் அனைவரையும் தேர்ந்தெடுக்க ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்!

**மூன்றாம் பதற்றம்** (நிபந்தனையுள்ள உடன்படிக்கைகள் மற்றும் நிபந்தனையற்ற உடன்படிக்கைகள்)

நிபந்தனை மற்றும் நிபந்தனையற்ற உடன்படிக்கைகளுக்கு இடையே ஒரு இறையியல் பதற்றம் அல்லது முரண்பாடு உள்ளது. தேவனின் மீட்பின் நோக்கம் / திட்டம் நிபந்தனையற்றது என்பது உறுதியான உண்மை (ஒ.பா. ஆதி. 15: 12-21). இருப்பினும், கட்டாயமான மனித பதில் எப்போதும் நிபந்தனைக்குட்பட்டது!

சிறப்பு தலைப்பு: உடன்படிக்கை

சிறப்பு தலைப்பு: வைத்திருத்தல்

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு இரண்டிலும் "ஆல் .... ஆகும் (நிலைசார் கூற்று)" முறை காணப்படுகின்றது. தேவன் உண்மையுள்ளவர்; மனிதகுலம் உண்மைதுவமற்றவர்கள். இந்த பதற்றம் மிகவும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. மொழிபெயர்ப்பாளர்கள் ஒரே ஒரு "சங்கடத்தின் கொம்பு/ உச்சம்" மீது மட்டுமே கவனம் செலுத்துகின்றனர். தேவனின் உண்மைத்துவம் அல்லது மனித முயற்சி, தேவனின் இறையாண்மை அல்லது மனிதகுலத்தின் சுதந்திரம். இரண்டும் வேதாகம மற்றும் அவசியமானவை.

சிறப்பு தலைப்பு: தேர்தல் / முன்குறிப்பு மற்றும் இறையியல் சமத்துவத்திற்கான தேவை

சிறப்பு தலைப்பு: கிழக்கேத்தய இலக்கியம் (வேதாகம முரண்பாடுகள்)

இது இறுதியியலுடன் தொடர்புடையது, தேவனின் பழைய ஏற்பாடு இஸ்ரேலுக்கு அளித்த வாக்குறுதிகள் ஆகும். தேவன் வாக்குறுதி அளித்தால், அதை நிறைவேற்றுவார்! தேவன் தம்முடைய வாக்குறுதிகளுக்கு கட்டுப்பட்டவர்; அவருடைய நற்பெயர் இதனுடன் சம்பந்தப்பட்டுள்ளது (ஒ.பா. எசே. 36: 22-38). நிபந்தனையற்ற மற்றும் நிபந்தனையுள்ள உடன்படிக்கைகள் கிறிஸ்துவில் நிறைவுபெறுகின்றன (ஒ.பா. ஏசாயா 53), இஸ்ரேல் அல்ல! தேவனின் இறுதியான உண்மைத்துவம் மனந்திரும்பி விசுவாசிக்கிற அனைவரின் மீட்பிலும் உள்ளது, உங்கள் தந்தை / தாய் யார் என்பதில் அல்ல! தேவனின் எல்லா உடன்படிக்கைகளுக்கும் வாக்குறுதிகளுக்கும் கிறிஸ்துவே திறவுகோல், இஸ்ரேல் அல்ல. வேதாகமத்தில் ஒரு இறையியல் அடைப்பு/ பெயர் விளக்கம் இருந்தால், அது சபையை அல்ல, இஸ்ரவேலை குறிக்கும் (ஒ.பா. அப்போஸ்தலர் 7; கலாத்தியர் 3; எபிரெயர் புத்தகம்).

சுவிசேஷ பிரகடனத்தின் உலக பணி திருச்சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது (ஒ.பா. மத் 28: 19-20; லூக்கா 24:47; அப்போஸ்தலர் 1: 8). அது இன்னும் ஒரு நிபந்தனை உடன்படிக்கையாகும்! தேவன் யூதர்களை முற்றிலுமாக நிராகரித்தார் என்பதை இது குறிக்கவில்லை (ஒ.பா. ரோமர் 9-11). இஸ்ரவேலை நம்புவதற்கு ஒரு இடமும் நோக்கமுமாக இருக்கலாம் (ஒ.பா. சக். 12:10).

**நான்காம் பதற்றம்** (கிழக்குக்கேத்தைய இலக்கிய மாதிரிகள் எதிராக மேற்கத்திய மாதிரிகள்).

வேதாகமத்தை சரியாக விளக்குவதில் இலக்கியநடை ஒரு முக்கிய அங்கமாக திகழ்கின்றது (*பார்க்கவும் Fee and Stuart, How To Read the Bible For All Its Worth*). சபை ஒரு

மேற்கத்திய (கிரேக்க) கலாச்சார அமைப்பில் உருவாகியுள்ளது. நவீன, மேற்கத்திய கலாச்சாரத்தின் இலக்கிய மாதிரிகளை விட கிழக்கு இலக்கியம் மிகவும் உருவ, உருவக மற்றும் குறியீடுகள் நிறைந்ததாகும் (சிறப்பு தலைப்பு: கிழக்குக்கேத்தைய இலக்கியம் (வேதாகம முரண்பாடுகள்) ஐப் பார்க்கவும். இது சுருக்கமான முன்மொழிவு உண்மைகளை விட மக்கள், சந்திப்புகள் மற்றும் நிகழ்வுகளில் கவனம் செலுத்துகிறது. கிறிஸ்தவர்கள் வேதாகம தீர்க்கதரிசனத்தை (பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு இரண்டும்) விளக்குவதற்கு தங்கள் வரலாறு (மேற்கெத்தேய) மற்றும் இலக்கிய மாதிரிகளைப் பயன்படுத்துவதால் குற்றப்படுத்தப்படுகின்றனர்.

ஒவ்வொரு தலைமுறையும் புவியியல் அமைப்பும் அதன் கலாச்சாரம், வரலாறு மற்றும் சொற்களஞ்சியத்தை வைத்து வெளிப்படுத்தல் புத்தகத்தினை அர்த்தவிளக்கப்படுத்த பயன்படுத்துகின்றன. அவை ஒவ்வொன்றும் தவறாக இருக்கின்றன! நவீன மேற்கத்திய கலாச்சாரமே வேதாகம தீர்க்கதரிசனத்தின் மையமாக இருக்கிறது என்று நினைப்பது நியாயமற்றதாகும்!

சிறப்பு தலைப்பு: அப்போகாலிப்டிக் இலக்கியம்

சிறப்பு தலைப்பு: தீர்க்கதரிசனம் (பழைய ஏற்பாட்டு)

சபை ஒருபோதும் வெளிப்படுத்தல் புத்தகத்தின் சரியான விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. எனது கவனம் என்னத்திலென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதி(கள்)ளில் அல்ல, முழு வேதாகமத்தையும் கேட்டு கையாள்வதில் ஆகும். வேதாகமத்தின் கிழக்கெத்தேய மனநிலை, பதற்றம் நிறைந்த ஜோடி வசனங்களில் உண்மையை முன்வைக்கிறது. முன்மொழிவு உண்மையை நோக்கிய நமது மேற்கத்திய போக்கு தவறானது அல்ல, ஆனால் சமநிலையற்றது! வெளிப்படுத்தல் புத்தகத்தின் தொடர்ச்சியான தலைமுறை விசுவாசிகளுக்கு அதன் மாறிவரும் நோக்கத்தைக் குறிப்பிட்டு விளக்கத்தை விளக்குவதன் மூலம் சில முட்டுக்கட்டைகளையாவது அகற்ற முடியும் என்று நான் நினைக்கிறேன். வெளிப்படுத்தல் புத்தகம் அதனுடைய சொந்த காலப்பகுதி மற்றும் அதன் இலக்கியநடையின் வெளிச்சத்தில் விளக்கப்பட வேண்டும் என்பது பெரும்பாலான மொழிப்பெயர்ப்பாளர்களுக்கு தெளிவாகத் தெரிந்துள்ளது. வெளிப்படுத்தல் புத்தகத்திற்கான ஒரு வரலாற்று அணுகுமுறையாக முதல் வாசகர்கள் புரிந்து கொள்ள முடிந்ததை, கூடியதை வைத்தே கையாள வேண்டும், ("வேதாகம விளக்கக் கருத்தரங்கு" என்ற எனது கருத்தரங்கைப் பார்க்கவும்); பல வழிகளில் நவீன மொழிபெயர்ப்பாளர்கள் புத்தகத்தின் பல அடையாங்களின் அர்த்தங்களை இழந்துவிட்டனர். வெளிப்படுத்தல் புத்தகத்தின் ஆரம்ப முக்கிய உந்துதல் துன்புறுத்தப்பட்ட விசுவாசிகளை உட்சகப்படுத்துவதே ஆகும். இது தேவன் வரலாற்றினை கட்டுப்படுத்துவதனைக் காட்டுகின்றது (பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் செய்தது போல); நியமிக்கப்பட்ட முடிவிடம், நியாயதீர்ப்பு அல்லது ஆசீர்வாதத்தை நோக்கி (பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் செய்ததைப் போல) வரலாறு நகர்கிறது என்பதை உறுதிப்படுத்தியது. இது முதல் நூற்றாண்டில்

யூதர்களின் வெளிப்படுத்தல் சொற்களான தேவனின் அன்பு, பிரசன்னம், வல்லமை மற்றும் இறையாண்மை ஆகியவற்றை உறுதிப்படுத்தியது!

இதே இறையியல் வழிகளில் இது ஒவ்வொரு தலைமுறை விசுவாசிகளுக்கும் செயல்படுகிறது. இது நன்மை தீமைகளின் அண்ட சராசரம் சார்ந்த பிரச்சனைகளை சித்தரிக்கிறது (ஒ.பா. கொலோசெயர் 1 மற்றும் எபேசியர் 6). முதல் நூற்றாண்டின் விவரங்கள் நாம் இழந்திருக்கலாம், ஆனால் வல்லமை நிறைந்த, ஆறுதலான சாத்தியங்களை அல்ல. நவீன, மேற்கத்திய மொழிபெயர்ப்பாளர்கள் வெளிப்படுத்தல் புத்தகத்தின் விவரங்களை தங்கள் சமகால வரலாற்றில் கட்டாயப்படுத்த முயற்சிக்கும்போது, தவறான விளக்கங்களின் முறைமை தொடர்கிறது! தேவனுக்கு எதிரான தலைவர் மற்றும் கலாச்சாரத்தின் (ஒ.பா. 2 தெசலோனிக்கேயர் 2) பலமான கடைசி தாக்குதலினை கடைசி தலைமுறை விசுவாசிகள் எதிர்கொள்ளும்போது, புத்தகத்தின் விவரங்கள் (கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை மற்றும் இறப்பு தொடர்பாக பழைய ஏற்பாட்டில் இருப்பதைப் போல) மீண்டும் குறிப்பிடத்தக்க வகையில் சொல்லார்தமாக மாறக்கூடும். இயேசுவின் (ஒ.பா. மத்தேயு 24; மார்க் 13; மற்றும் லூக்கா 21) மற்றும் பவுலின் (ஒ.பா. 1 கொரிந்தியர் 15; 1 தெசலோனிக்கேயர் 4-5; மற்றும் 2 தெசலோனிக்கேயர் 2) வார்த்தைகளும் கூட வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்படும் வரை வெளிப்படுத்துதலின் இந்த முழுமையான நிறைவேற்றங்களை யாரும் அறிய முடியாது. யூகித்தல், ஊகம் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட கிறிஸ்தவ சித்தாந்தம் அனைத்தும் பொருத்தமற்றவை. இறுதிக்கால இலக்கியம் இந்த நெகிழ்வுத்தன்மையை அனுமதிக்கிறது. வரலாற்று விவரிப்புகளை மிஞ்சும் படங்கள் மற்றும் அடையாளங்களுக்கு தேவனுக்கு நன்றி! தேவன் கட்டுப்படுத்துகிறார்; அவர் ஆட்சி செய்கிறார்; அவர் மீண்டும் வருகிறார்! பார்க்கவும் *D. Brent Sandy, Plowshares and Pruning Hooks: Rethinking the Language of Biblical Prophecy and Apocalyptic.*

பெரும்பாலான நவீன விளக்கவுரைகள் இலக்கியநடை அர்த்தங்களை இழக்கின்றன! நவீன மேற்கத்திய மொழிப்பெயர்ப்பாளர்கள் பெரும்பாலும் யூத இறுதியியல் இலக்கியத்தின் தெளிவற்ற, குறியீட்டு, வியத்தகு இலக்கியநடையுடன் நியாயமாக இருப்பதை விட தெளிவான, தர்க்கரீதியான இறையியல் முறையை நாடுகிறார்கள். இந்த உண்மையை ரால்ப் பி. மார்ட்டின், "புதிய ஏற்பாட்டு விளக்கங்களுக்கான அணுகுமுறைகள்" "Approaches to New Testament Exegesis," என்ற தனது கட்டுரையில், ஐ. ஹோவர்ட் மார்ஷல் திருத்திய புதிய ஏற்பாட்டு விளக்கம் என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த எழுத்தாக்கத்தின் வியத்தகு தரத்தை நாங்கள் அடையாளம் கண்டுகொண்டு, மதரீதியான சத்தியத்தை வெளிப்படுத்த ஒரு ஊடகமாக மொழி பயன்படுத்தப்படுவதை நினைவுபடுத்தாவிட்டால், வெளிப்பாடுகள் பற்றிய நமது

புரிதலில் நாம் கடுமையாகத் தவறிவிடுவோம், மேலும் அதன் தரிசனங்களை இது ஒரு நேரடி உரைநடை புத்தகம் போலவும், அனுபவ மற்றும் வரலாற்றின் தரவுரீதியான நிகழ்வுகளை விவரிப்பதில் அக்கறை கொண்டதாகவும் விளங்குகிறது. பிந்தைய போக்கை முயற்சிப்பது என்பது அனைத்து விதமான மொழிபெயர்ப்புகளுக்குமான பிரச்சனையாகும். இன்னும் பாரதூரமாக இது வெளிப்படுத்தலின் அத்தியாவசிய பொருளின் சிதைவுக்கு வழிவகுக்கிறது மற்றும் எனவே புதிய ஏற்பாட்டில் தேவனின் கிறிஸ்துவில் உள்ள இறையாண்மையின் புராண மொழியில் ஒரு வியத்தகு கூற்று மற்றும் வலிமையையும் அன்பையும் கலக்கும் அவரது ஆட்சியின் முரண்பாடு (ஒ.பா. வெளி. 5: 5,6; சிங்கம் ஆட்டுக்குட்டி) "(பக். 235) இந்த பகுதியின் பெரும் மதிப்பை இழக்கிறது.

டபிள்யூ. ராண்டால்ஃப் டேட் தனது புத்தகமாகிய வேதாகம விளக்கங்கள்: *W. Randolph Tate in his book Biblical Interpretations:*

"வேதாகமத்தில் இறுதி வெளிப்பாடுகள் போன்ற மனச்சோர்வடையத்தக்க முடிவுகளுடன் குறிப்பாக தானியல் மற்றும் வெளிப்படுத்துதல் புத்தகங்கள் தவிர வேறு எந்த இலக்கிய நடையும் அவ்வளவு ஆர்வத்துடன் வாசிக்கப்படவில்லை, இந்த வகையான இலக்கிய நடை அதன் இலக்கிய வடிவங்கள், கட்டமைப்பு மற்றும் நோக்கம் பற்றிய அடிப்படை தவறான புரிதலால் தவறான மொழிபெயர்ப்பின் அவலம் வரலாற்றால் பாதிக்கப்பட்டது. விரைவில் என்ன நடக்கப்போகிறது என்பதை வெளிப்படுத்துவதாகக் கூறப்படுவதால், இறுதி வெளிப்பாடுகள் எதிர்காலத்தின் ஒரு சாலை வரைபடமாகவும் பார்க்கப்படுகிறது. இவ்விதமான பார்வையில் உள்ள துன்பகரமான குறைபாடு என்னவென்றால், புத்தகங்களின் குறிப்பு கட்டமைப்பானது ஆசிரியரின் சமகாலத்தை விட வாசகரின் சமகாலத்தின் அடிப்படையில் அனுமானிக்கப்படுகின்றமை ஆகும். இறுதி வெளிப்பாடுகளுக்கான (apocalypse) இந்த தவறான வழிகாட்டுதல் (குறிப்பாக வெளிப்படுத்துதல் விஷேசம்) படைப்பை ஒரு மறைகுறியீட்டுத் தகவல் (cryptogram) போலவே கருதுகிறது, இதன் மூலம் சமகால நிகழ்வுகள் எழுத்தாக்கத்தின் அடையாளத்தை விளக்குவதற்கு பயன்படுத்தப்படலாம். முதல், அபோகாலிப்டிக் அதன் செய்திகளை குறியீட்டின் மூலம் தொடர்புகொள்கிறது என்பதை மொழிபெயர்ப்பாளர் அங்கீகரிக்க வேண்டும். ஒரு குறியீடு உருவகமாக இருக்கும்போது அதை சொல்லர்த்தமாக விளக்குவது வெறுமனே தவறாகப் புரிந்துகொள்வதாகும். அபோகாலிப்டிக் நிகழ்வுகள் வரலாற்று ரீதியானவையா என்பது பிரச்சினை அல்ல. நிகழ்வுகள் வரலாற்று ரீதியாக இருக்கலாம்; அவை உண்மையிலேயே நடந்திருக்கலாம், அல்லது நடக்கக்கூடுமானதாக இருக்கலாம், ஆனால் எழுதாசிரியர் நிகழ்வுகளை முன்வைத்து படங்கள் மற்றும் மூலமாதிரிகள் மூலம் அர்த்தத்தைத் தெரிவிக்கிறார் "(பக். 137).

ரைக்கன், வில்ஹோஸ்ட் மற்றும் லாங்மேன் III ஆகியோரால் திருத்தப்பட்ட *Dictionary of Biblical Imagery*.

"இன்றைய வாசகர்கள் பெரும்பாலும் இந்த இலக்கிய நடையால் குழப்பமடைந்து விரக்தியடைகிறார்கள். எதிர்பாராத உருவ படங்கள் மற்றும் இந்த உலக அனுபவங்கள் பார்ப்பதற்கு வினோதமானவை மற்றும் பெரும்பாலான வேதவசனங்களுடன் ஒத்திசைக்கப்படவில்லை. இந்த இலக்கியத்தை முக மதிப்பில் எடுத்துக்கொள்வதும், பல வாசகர்கள் 'எப்போது என்ன நடக்கும் என்பதை தீர்மானிக்க துடிக்கிறதும், இதனால் வெளிப்படுத்தல் செய்தியின் நோக்கத்தை காண முடிவதில்லை "(பக். 35)

**ஐந்தாவது பதற்றம்** (தேவனுடைய ராஜ்யம் தற்போது இருப்பினும் எதிர்காலத்தில் உள்ளது)

தேவனுடைய ராஜ்யம் தற்போது இருப்பினும் எதிர்காலத்தில் உள்ளது. இறுதியியல் பார்வையில் கவனம் செலுத்தும் போது இந்த இறையியல் முரண்பாடு தோன்றுகிறது. ஒருவர் இஸ்ரேலுக்கான அனைத்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களும் உண்மையில் நிறைவேறும் என்பதை எதிர்பார்க்கிறார் என்றால், இராச்சியம் பெரும்பாலும் இஸ்ரேலை ஒரு புவியியல் வட்டாரமாகவும், இறையியல் முன்னுரிமையாகவும் மீள்நிரப்பப்படும்! வெளிப்படுத்துதல் 5-ல் சபை இரகசியமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், மீதமுள்ள அதிகாரங்கள் இஸ்ரேலுடன் தொடர்புடையவை (ஆனால் குறிப்பு வெளி. 22:16).

இருப்பினும், வாக்குறுதியளிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு மேசியாவால் ராஜ்யம் பிரதிஷ்டை பண்ணப்படுத்தலில் கவனம் செலுத்துகிறது என்றால், அது கிறிஸ்துவின் முதல் வருகையுடன் நிகழ்கிறது, பின்னர் கிறிஸ்துவின் மனு அவதாரம், வாழ்க்கை, போதனைகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நோக்கி கவனம்இருக்கும். தற்போதைய இரட்சிப்பின்மீதே இறையியல் முக்கியத்துவம் உள்ளது. ராஜ்யம் வந்துவிட்டது, அனைவருக்கும் கிறிஸ்துவின் இரட்சிப்பினால் பழைய ஏற்பாடு நிறைவேறியது, அவருடைய ஆயிர வருட ஆட்சி அல்ல!

கிறிஸ்துவின் இரு வருகைகளையும் வேதாகமம் பேசுகிறது என்பது நிச்சயமாக உண்மை, ஆனால் எங்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்? பெரும்பாலான பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் முதல் வருகை, மேசியானிய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதில் கவனம் செலுத்துகின்றன என்று எனக்குத் தோன்றுகிறது (ஒ.பா. தானியல் 2). பல வழிகளில் இது தேவனின் நித்திய ஆட்சிக்கு ஒத்ததாகும் (ஒ.பா. தானியேல் 7). பழைய ஏற்பாட்டின் கவனம் தேவனின் நித்திய ஆட்சியில் உள்ளது, ஆனால் அந்த ஆட்சியின் வெளிப்பாட்டு வழிமுறை மேசியாவின் ஊழியமாகும் (ஒ.பா. 1 கொரி. 15: 25-27). இது உண்மையா என்ற கேள்வி அல்ல; இரண்டும் உண்மைதான், ஆனால் முக்கியத்துவம் எங்கே? சில மொழிப்பெயர்ப்பாளர்கள் மேசியாவின் ஆயிரவருஷ அரசாட்சியில் மிகவும் கவனம் செலுத்துகிறார்கள் என்றே சொல்ல வேண்டும் (சிறப்பு தலைப்பு: ஆயிரவருஷ அரசாட்சி (மிலேனியம்) பார்க்கவும்) அவர்கள் பிதாவின் நித்திய ஆட்சி குறித்த வேதாகம கவனத்தை தவறவிட்டார்கள்.

கிறிஸ்துவின் ஆட்சி ஒரு ஆரம்ப நிகழ்வு. கிறிஸ்துவின் இரண்டு வருகைகளும் பழைய ஏற்பாட்டில் தெளிவாக இல்லை என்பதால், மேசியாவின் தற்காலிக ஆட்சியும் இல்லை!

இயேசுவின் பிரசங்கத்திற்கும் போதனைக்குமான திறவுகோல் வசனம் தேவனுடைய ராஜ்யம் ஆகும். இவை இரண்டும் நிகழ்காலத்தில் (இரட்சிப்பு மற்றும் ஊழியம்), மற்றும் எதிர்காலம் (பரவலான மற்றும் வல்லமையில்) உள்ளது. வெளிப்படுத்துதல், அது ஒரு மேசியானிய ஆயிர வருட ஆட்சியில் (ஒ.பா. வெளிப்படுத்துதல் 20) கவனம் செலுத்துகிறது என்றால், அது பூர்வாங்கமானது, அனால் இறுதியானது அல்ல (ஒ.பா. வெளிப்படுத்துதல் 21-22). ஒரு தற்காலிக ஆட்சி அவசியம் என்பது பழைய ஏற்பாட்டிலிருந்து தெளிவாகத் தெரியவில்லை; உண்மையில், தானியல் 7 இன் மேசியானிய ஆட்சி நித்தியமானது, ஆனால் ஆயிரவருஷத்திற்கானது அல்ல.

சிறப்பு தலைப்பு: தேவனின் ராஜ்யம்

**ஆறாம் பதற்றம்** (கிறிஸ்துவின் உடனடி வருகை மற்றும் தாமதமான பரோசியா - நியதிபதியின் நியாயத்தீர்ப்பு)

இயேசு விரைவில், திடீரென்று, எதிர்பாராத விதமாக வருவார் என்று பெரும்பாலான விசுவாசிகள் கற்பிக்கப்பட்டுள்ளனர் (ஒ.பா. மத் 10:23; 24: 27,34,44; மாற்கு 9: 1; 13:30; வெளி 1: 1,3; 2: 16; 3:11; 22: 7,10,12,20; பார்க்கவும் சிறப்பு தலைப்பு: விரைவில் திரும்புவார்). ஆனால் விசுவாசிகளின் ஒவ்வொரு தலைமுறையும் எதிர்பார்த்தவை இதுவரைக்கும் தவறாகவேய உள்ளன! ஒவ்வொரு தலைமுறையினருக்கும் இயேசுவின் விரைவான வருகை (உடனடி) ஒரு வல்லமை நிறைந்த வாக்குறுதியளிக்கப்பட்ட நம்பிக்கையாகும், ஆனால் ஒரு கூட்டத்திற்கு மட்டுமே யதார்த்தத்தில் பொருந்தும் (மற்றும் அவர் துன்புறுத்தப்பட்டவராக காணப்படுவார்). விசுவாசிகள் அவர் நாளை வருவதைப் போல வாழ வேண்டும், ஆனால் பெரிய ஆணையத்தைத் திட்டமிட்டு செயல்படுத்தவும் (cf. மத் 28: 19-20) வேண்டும். அவர் எம்மோடு வாசம் செய்வதுபோல்.

நற்செய்திகளில் சில பகுதிகளும் 1 மற்றும் 2 தெசலோனிக்கேயரும் தாமதமான இரண்டாம் வருகையை (பரோசியா) அடிப்படையாகக் கொண்டுள்ளன. முதலில் சில வரலாற்று நிகழ்வுகள் நடைபெற வேண்டி உள்ளன:

1. உலகளாவிய சுவிசேஷம் அறிவித்தல் (ஒ.பா. மத் 24:14; மாற்கு 13:10)
2. "பாவமனிதன்" வெளிப்படுதல் (ஒ.பா. மத் 24:15; 2 தெசலோனிக்கேயர் 2;

வெளிப்படுத்துதல் 13)

3. பெரும் துன்புறுத்தல் (ஒ.பா. மத் 24: 21,24; வெளிப்படுத்துதல் 13)

ஒரு வேண்டுமென்ற தெளிவின்மை காணப்படுகின்றது (ஒ.பா. மத் 24: 42-51; மாற்கு 13: 32-36)! ஒவ்வொரு நாளும் உங்கள் கடைசி போலவும், ஆனால் எதிர்கால ஊழியத்திற்கான திட்டமும் பயிற்சியும் பெறவும் வேண்டும்!

சிறப்பு தலைப்பு: தாமதமான இரண்டாவது வருகை (THE DELAYED SECOND COMING)

**ஒத்திசைவு மற்றும் சமநிலை**

நவீன இறுதியியல் மொழிபெயர்ப்புகளின் வெவ்வேறு பள்ளிகள் அனைத்தும் பாதி உண்மைகளைக் கொண்டிருக்கின்றன என்று சொல்லப்பட வேண்டும். அவை சில பந்திகளை நன்கு மொழிபெயர்த்து விளக்குகின்றன. சிக்கல் எதிலென்றால் ஒத்திசைவிலும் சமநிலையிலும் உள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்ட இறையியல் கட்டமைப்பை நிரப்ப வேதாகம பகுதிகளை பயன்படுத்தும் முன்னறிவிப்புகளின் தொகுப்பு பெரும்பாலும் உள்ளது. ஒரு தர்க்கரீதியான, காலவரிசைப்படி, முறையான இறுதியியலை வேதாகமம் வெளிப்படுத்தவில்லை. இது ஒரு குடும்ப ஆல்பம் போன்றது. படங்கள் உண்மைதான், ஆனால் எப்போதும் வரிசையில், சூழமைவில், ஒரு தர்க்கரீதியான வரிசையில் இருப்பதில்லை. சில படங்கள் ஆல்பத்திலிருந்து விழுந்து விட்டன, பின்னர் தலைமுறையில் வரும் குடும்ப உறுப்பினர்களுக்கு அவற்றை எங்கே திருப்பிப் பொருத்துவது என்று தெரிவதில்லை. வெளிப்படுத்துதல் விஷேசத்தின் சரியான மொழிபெயர்ப்பிற்கான திறவுகோல் என்னவென்றால் அசல் எழுத்தாளரின் இலக்கிய வகையைத் தேர்ந்தெடுப்பதில் அவர் வெளிப்படுத்திய நோக்கமேயாகும். பெரும்பாலான மொழிப் பெயர்ப்பாளர்கள் புதிய ஏற்பாட்டின் பிற இலக்கிய நடைகளில் தாங்கள் பயன்படுத்திய விளக்கவுரை கருவிகள் மற்றும் நடைமுறைகளை வெளிப்படுத்துதல் விஷேசத்திற்கான விளக்கங்களுக்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர். இறையியல் கட்டமைப்பை அமைக்கவும், வெளிப்படுத்துதல் விஷேசம் விளக்கமாக செயல்படவும். இயேசு மற்றும் பவுலின் போதனைகளின் இறையியல் கட்டமைப்பை அனுமதிப்பதற்குப் பதிலாக அவர்கள் பழைய ஏற்பாடில் கவனம் செலுத்துகிறார்கள். பார்க்கவும் *Fee and Stuart, How To Read the Bible for All Its Worth, பக். 249-264.*

வெளி 22: 18-19-ல் குறிப்பிடப்பட்டுள்ள சாபத்தால் அல்ல, ஆனால் சர்ச்சையின் அளவின் காரணமாக, வெளிப்படுத்துதல் பற்றிய எனது வேதாகம விளக்கவுரையை நான் கொஞ்சம் பயத்துடனும், நடுக்கத்துடனும் அணுகுவதை ஒப்புக்கொள்ள வேண்டும், இந்த புத்தகத்தின் விளக்கம் கடவுளுடைய மக்களிடையே தொடர்ந்தும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தேவனின் வெளிப்பாட்டை நான் நேசிக்கிறேன்.

எல்லா மனிதர்களும் பொய்யர்களாக இருக்கும்போது அது உண்மைதான் (ஒ.பா. ரோமர் 3: 4; சிறப்புத் தலைப்பைக் காண்க: வேதாகமம் (அதன் தனித்துவமும் அருள்பாடும்)! எனது வேதாகம விளக்கவுரையை பின்வருமாறு பயன்படுத்தவும் உறுதியானதாக இல்லாமல் சிந்தனையைத் தூண்டுவதாக, சாலை வரைபடமாக

இல்லாமல் ஒரு அடையாள பலகையாக, "இவ்வாறு இறைவன் கூறுகிறார்." என்று இல்லாமல் ஒரு "என்ன என்றால்," என்றே பயன்படுத்தவும். எனது சொந்த குறைபாடுகள், சார்புநிலைகள் மற்றும் இறையியல் நிகழ்ச்சி நிரலுடன் நான் நேருக்கு நேர் வந்துள்ளேன். மற்ற உரைபெயர்ப்பாளர்களையும் நான் பார்த்திருக்கிறேன் (*Four Views on the Book of Revelation, 1998, and The Meaning of the Millennium,* பல ஆசிரியர்கள், 1977 ஐப் பார்க்கவும்). மக்கள் வெளிப்படுத்துதல் விஷேசத்தில் கண்டுபிடிக்க எதிர்பார்க்கும் விஷயங்களை காணலாம் என்பது கிட்டத்தட்ட தெரிகிறது. இந்த இலக்கிய நடை துஷ்பிரயோகம் பண்ணப்படுவதற்கு தன்னைக் கொடுக்கிறது! இருப்பினும், இது ஒரு நோக்கத்திற்காக வேதாகமத்தில் உள்ளது. முடிவடையும் இடத்தில் உள்ள "சொல்" அதன் இடத்தில் தற்செயலாக அமையவில்லை. ஒவ்வொரு தலைமுறையினருக்கும் தேவனிடமிருந்து அவருடைய பிள்ளைகளுக்கு இது ஒரு செய்தியைக் கொண்டுள்ளது. நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்! நாம்சரியென்று காட்ட கூட்டத்தை கூட்டுவதல்ல, ஒன்றிணைவோம்; தெளிவான மற்றும் மையமானதை உறுதிப்படுத்துவோம், இருக்கக்கூடிய அனைத்தும் உண்மையாக இருக்க முடியாது. தேவன் நம் அனைவருக்கும் உதவுவாறாக!

Copyright © 2014 Bible Lessons International

**5:5 "வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளும்"** "இவை நீதிமான்களுக்கான இரண்டு செமிடிக் மரபுத்தொடர்களாகும் (ஒ.பா. லூக்கா 16: 8; யோவான் 1: 4-9; 3: 17-21; 8:12; 11: 9-10; 12: 35-36,46; எபே. 5: 8; 1 யோவான் 1: 5,7; 2: 8-10). இந்த ஒளி எதிர் இருளின் உருவக இரட்டைவாதம் பண்டைய கிழக்கேத்தியத்தின் சிறப்பியல்பாகும். அப்போஸ்தலன் யோவானின் எழுத்துக்களிலும், சவக்கடல் சுருள்களிலும் இது ஒரு தொடர்ச்சியான கருப்பொருளாக இருக்கின்றது.

**5:6 "நாம் தூங்காமல்"** இது 4:13ff இலிருந்து வேறுபட்ட சொல்லாகும். இது பெரும்பாலும் புதிய ஏற்பாட்டில் அறநெறி சார்ந்த அலட்சியத்திற்காக பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. மாற்கு 13:36; எபே 5:14). "தூக்கம்" (katheudō) என்ற சொல்லின் மூன்று வெவ்வேறு பயன்பாடுகளைக் கவனியுங்கள்: (1) அறநெறி சார்ந்த விழிப்புணர்வு இல்லாமை, (1 தெச. 5: 6); (2) உடல் ஓய்வு, (1 தெச. 5: 7); (3) மரணம், (1 தெச. 5:10).

**NASB, NKJV,**
**NRSV "மற்றவர்கள் போல"**
**TEV "மற்றவர்களை மாதிரி"**
**NJB "எல்லோரும் செய்வது போல"**

இது சொல்லார்தமாக "மீதமுள்ள" அல்லது "மிச்சமுள்ள" எனப் பொருள்படும். 1 தெச 4:13 இல் நம்பிக்கை இல்லாத அவிசுவாசிகளை விவரிக்க பயன்படுத்தப்படும் அதே சொல்லும் இதுவாகும்.

▣ **"எச்சரிக்கையாகவும் தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்"** 6 வது வசனம் நிகழ்கால விருப்பநிலை செய்வினைகளைக் கொண்டுள்ளது. முதலாவது எதிர்மறையானது, "தொடர்ந்து தூங்காமல்" அடுத்த இரண்டும் நேர்மறையானவை, "விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்." இவை தொடர்ச்சியான

நிதானத்தை, ஆனால் சிறு இணைப்பை வலியுறுத்துகின்றன. சில விசுவாசிகள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள், எச்சரிக்கையாகவோ நிதானமாகவோ இல்லை. விழிப்புணர்வு என்பது இரண்டாம் வருகையைப் பற்றிய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு ஒரு பொதுவான கருப்பொருளாகும். (ஒ.பா. மத் 24: 42-43; 25:13; மாற்கு 13:34; லூக்கா 21:34). "எச்சரிக்கை" மற்றும் "நிதானமான" இரண்டும் உருவகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. "தெளிந்தவர்களாக" என 1 தெச. 5: 6 & 8ல் மன ரீதியான விழிப்புணர்வு அல்லது சுய கட்டுப்பாட்டுக்கு பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. 2 தீமோ .4: 5; 1 பேது. 1:13; 4: 7; 5: 8).

**5:8 "தரித்துக்கொண்டிருக்கக்கடவாம்"** இது ஒரு இறந்தகால இடை செய்நிலையாகும், நாங்கள் அனைவருக்கும் ஒரு முறை "தரித்துக்கொள்கிறோம். என வாசிக்கலாம்". இது ரோமர் 13:12; எபே 6: 11-14லும் காணப்படுகின்றது, இது ஏசா. 59:17ஐ பிரதிபலிக்கிறது. பவுல் இந்த சர்வாயுத வர்க உருவகத்தை அடிக்கடி பயன்படுத்தினார், ஆனால் எப்போதும் ஒரே கிறிஸ்தவ பண்புகளை பிரதிநிதித்துவப்படுத்த கவசத்தை பயன்படுத்தவில்லை. விசுவாசிகள் கிறிஸ்து வழங்கிய ஆவிக்குரியஆவிக்குரிய ஆயுதங்களை தனிப்பட்ட முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முதிர்ச்சியின் பாதுகாப்பு தானாக ஏற்படுவதில்லை (ஒ.பா. 1 தெச. 5: 7).

▣ **"விசுவாசம்...அன்பு...நம்பிக்கை..."** இவை பவுலுக்கு பிடித்த கிறிஸ்தவ நற்பண்புகளின் முக்கோணமாகும். (ஒ.பா. ரோமர் 5: 2-5; கலா. 5: 5-6; கொலோ .1: 4-5; 1 தெச. 1: 3; எபி. 6: 10-12; 1 பேதுரு 1: 21-22). ஆரம்ப விசுவாசத்திலிருந்து முழுமையான விசுவாசத்திற்க்கு இவைகள் ஒரு இணைப்பை உருவாக்குகின்றன.

▣ **"நம்பிக்கை"** இது பெரும்பாலும், குறிப்பாக I & 2 தெசலோனிக்கேயர்களில் இரண்டாவது வருகையைக் குறிக்கப் பயன்படுகிறது. சிறப்பு தலைப்பு: கலா. 5: 5 இல் நம்பிக்கை. - பார்க்கவும்

**5:9 "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று"** தேவனின் அன்பு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே நமக்குள் பாய்கிறது. அவர்தான் ஒரே வழி (ஒ.பா. யோவான் 14: 6); வாசல் (யோவான் 10: 1-3); ஒரே மத்தியஸ்தர் (1 தீமோ. 2: 5) ஆவார்.

**SPECIAL TOPIC: GREEK VERB TENSES USED FOR SALVATION**
**சிறப்பு தலைப்பு: இரட்சிப்பு (கிரேக்க வினை சொற்கள்)**

இரட்சிப்பு என்பது ஒரு பொருள் அல்ல, ஆனால் கிறிஸ்துவிற்குள்ளான தேவனோடுள்ள எமது தினசரி உறவாகும். ஒருவர் கிறிஸ்துவை நம்பும்போது அது முடிவல்ல; அது தான் ஆரம்பம் (ஒரு வாயில் மற்றும் ஒரு பாதை, ஒ.பா. மத். 7: 13-14)! இது தீ காப்பீட்டுக் கொள்கையோ, பரலோகத்திற்கான பயணச்சீட்டோ அல்ல, மாறாக வளர்ந்து வரும் கிறிஸ்துவின் தன்மையுடனான வாழ்க்கை (ஒ.பா. ரோமர் 8: 28-29; 2 கொரி. 3:18; 7: 1; கலா. 4:19; எபே. 1: 4; 4:13; 1 தெச. 3:13; 4: 3,7; 5:23; 1 பேது. 1:15). அமெரிக்காவில் ஒரு பழமொழி உள்ளது, அதாது இருவர் நீண்ட காலம் ஒன்றாக வாழ்ந்தால், மேலும் அவர்கள் ஒரே மாதிரியாக இருக்கத் தொடங்குகிறார்கள். இதுவே இரட்சிப்பின் குறிக்கோள்!

இரட்சிப்பு ஒரு பூர்த்தியடைந்த செயலாக (இறந்தகாலம்

1. அப்போஸ்தலர் 15:11

2. ரோமர் 8:24

3. 2 தீமோத்தேயு 1: 9

4. தீத்து 3: 5

5. ரோமர் 13:11 (கோட்பாட்டாளரை எதிர்காலத்துடன் இணைக்கிறது

6. நோக்குநிலை)

இரட்சிப்பு ஒரு நிலையாக (முற்று)

1. எபேசியர் 2: 5,8

இரட்சிப்பு ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக (நிகழ்காலம்)

2. 1 கொரிந்தியர் 1:18; 15: 2

3. 2 கொரிந்தியர் 2:15

4. 1 பேதுரு 3:21

இரட்சிப்பு ஒரு எதிர்கால ஒருங்கிணைப்பாக (எதிர்கால வினைச்சொல் அல்லது சூழல்)

5. ரோமர் 5: 9,10; 10: 9,13

6. 1 கொரிந்தியர் 3:15; 5: 5

7. பிலிப்பியர் 1:28

8. 1 தெசலோனிக்கேயர் 5: 8-9

9. எபிரெயர் 1:14; 9:28

10. 1 பேதுரு 1: 5

ஆகையால், இரட்சிப்பு ஆரம்ப விசுவாச தீர்மானத்தோடு தொடங்குகிறது (ஒ.பா. யோவான் 1:12; 3:16; ரோமர் 10: 9-13), ஆனால் இந்த விசுவாச வாழ்க்கை முறையில் வெளியிடப்பட வேண்டும் (ஒ.பா. ரோமர் 8:29; கலா. 2: 19-20; எபே 1: 4; 2:10), இது ஒரு நாள் நிறைவுபெறும் (ஒ.பா. 1 யோவான் 3: 2). இந்த இறுதி நிலை மகிமைப்படுத்தல் என்று அழைக்கப்படுகிறது (ஒ.பா. ரோமர் 8: 28-30). இதை இவ்வாறு விளக்கலாம்

1. ஆரம்ப இரட்சிப்பு - நீதிமனக்கப்படல் (பாவத்தின் தண்டனையிலிருந்து

காப்பாற்றப்பட்டது)

2. முற்போக்கான இரட்சிப்பு - பரிசுத்தமாக்குதல் (பாவத்தின் வல்லமையிலிருந்து காப்பாற்றப்பட்டது)

3. இறுதி இரட்சிப்பு - மகிமைப்படுத்துதல் (பாவத்தின் பிரசன்னத்தில் இருந்து காப்பாற்றப்பட்டது)

Copyright © 2014 Bible Lessons International

**5:10 "அவர் நமக்காக மரித்தாரே"** இது நம் சார்பாக இயேசுவின் பிரதிநிதித்துவத் தியாகத்தை அல்லது பலியை வெளிப்படுத்துகிறது. (ஒ.பா. ஏசா. 53; மாற்கு 10:45; 2 கொரி. 5:21).

▣ **"நாம் விழித்திருப்பவர்களானாலும் நித்திரையடைந்தவர்களானாலும்"** இதற்கு (1) சபை தங்கள் ஐக்கியத்தில் இருந்த இறந்த சபை உறுப்பினர்களைப் பற்றி அக்கறை கொண்டிருந்தது அல்லது (2) விழிப்புடன் இல்லாத, நிதானமாக இல்லாத விசுவாசிகளுக்காகவும் இயேசு இறந்தார் என இரண்டு விளக்கங்கள் உள்ளன:

▣ **"தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி"** பரலோகம் நிச்சயமாக ஒரு இடம் ஆகும் (ஒ.பா. யோவான் 14: 2-3 அ), ஆனால் அதன் முதன்மையான அர்த்தம் இயேசுவோடு இருப்பதாகும் (ஒ.பா. யோவான் 14: 3 சி; 2 கொரி. 5: 6,8). பரலோகம், இரட்சிப்பைப் போலவே, ஒரு தனிப்பட்ட உறவாகும்!

**5:11 "ஒருவரையொருவர் தேற்றி / உற்சாகப்படுத்தி "** இது நிகழ்கால கட்டளை செய்வினையாகும். "உற்சாகப்படுத்தல்" என்பது *"paraclētos"* "பராக்லெட்டோஸ்" (ஒ.பா. யோவான் 14: 16,26; 15:26; 16:17; 1 யோவான் 2: 1) என்ற அதே மூலத்திலிருந்து வந்த சொல்லாகும். பவுலினுடைய இரகசிய வருகை பற்றிய விவாதம் (ஒ.பா. 1 தெச. 4: 13-18) ஒரு நெறிமுறை, ஊழிய அறிவுறுத்தலில் முடிகிறது (ஒ.பா. 1 கொரி. 15:58; எபே. 4:13). கோட்பாடு என்பது தெய்வீக வாழ்க்கையை ஊக்குவிக்க வேண்டும் (ஒ.பா. லூக்கா 12:48).

▣ **"ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி"** இது நிகழ்கால கட்டளை செய்வினையாகும். கிறிஸ்துவின் வருகையும் பரலோகத்தையும் எதிர்பார்ப்பது ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய நம்மைத் உட்சகப்படுத்த வேண்டும், மாறாக மனிதனால் முன்வைக்கப்பட்ட இறுதியியல் முறைமைகளுக்கு எதிராகப் போராடக்கூடாது!

**SPECIAL TOPIC: EDIFY**
**சிறப்பு தலைப்பு: பக்திவிருத்தி/ திருத்துதல்**

இந்த வார்த்தையான oikodomeō ஓய்கோடோமே மற்றும் அதன் பிற வடிவங்கள் பெரும்பாலும் பவுலால் பயன்படுத்தப்படுகின்றன. சொல்லர்த்தமாக "ஒரு வீட்டைக்

கட்டுவது" எனப் பொருள்படுகின்றது (ஒ.பா. மத். 7:24), ஆனால் இது உருவகமாகப் பயன்படுத்தப்பட்டது:

1. கிறிஸ்துவின் உடல், சபை, 1 கொரி. 3: 9; எபே 2:21; 4:16
2. கட்டமைத்தல்
    1. பலவீனமான சகோதரர்கள், ரோ. 15: 1
    2. பிறன், ரோம். 15: 2
    3. ஒருவருக்கொருவர், எபே. 4:29; 1 தெச. 5:11
    4. ஊழியம் செய்யும்பரிசுத்தவான்கள், எபே. 4:11
3. கட்டமைத்தல் அல்லது பக்திவிருத்தி
    1. அன்பு, 1 கொரி 8: 1; எபே 4:16
    2. தனிப்பட்ட சுதந்திரங்களை கட்டுப்படுத்துதல், 1 கொரி 10: 23-24
    3. ஊகங்களைத் தவிர்ப்பது, 1 திமோ. 1: 4
    4. வழிபாட்டு சேவைகளில் பேச்சாளர்களைக் கட்டுப்படுத்துதல் (பாடகர்கள், போதகர்கள், தீர்க்கதரிசிகள், அந்நிய பாஷை பேசுபவர்கள் மற்றும் மொழிப்பெயர்ப்பாளர்கள்), 1 கொரி 14: 3-4,12
4. எல்லாவற்றையும் பக்திவிருத்தி அடைய செய்ய வேண்டும்.
    1. பவுலின் அதிகாரம், 2 கொரி 10: 8; 12:19; 13:10
    2. சுருக்க அறிக்கைகள் ரோமர் 14:19 மற்றும் 1 கொரி. 14:26

Copyright © 2014 Bible Lessons International

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 5:12-22**

**12. அன்றியும், சகோதரரே, உங்களிடையே விடாமுயற்சியுடன் பிரயாசப்பட்டு,**
**கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப்**
**புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் பாராட்டி, 13. அவர்களுடைய**
**கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி**
**உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்.**
**14. மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப்**
**போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள்,**
**திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனர்களுக்கு உதவுங்கள்,**
**எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். 15. ஒருவனும் மற்றொருவன் செய்யும்**
**தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற**
**யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். 16. எப்பொழுதும்**
**சந்தோஷமாயிருங்கள். 17. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். 18.**
**எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து**
**இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 19.**

**ஆவியை அவித்துப்போடாதிருங்கள். [20]. தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். [21]. எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். [22]. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.**

**5:12 "சகோதரரே"** இந்த சொல் பெரும்பாலும் பவுலால் ஒரு புதிய விடயத்திற்கு மாற்றும் போது பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. 1 தெச. 4:13; 5: 1), என்றாலும் எப்போதும் இல்லை (ஒ.பா.1 தெச. 5:14 மற்றும் 25, 26). பவுல் முழு சபையும் குறிப்பிடுகிறார் என்பது இங்கே காட்தப்படுகிறது.

**NASB "பாராட்டல்"**
**NKJV "இணங்கண்டு கொள்ளல்"**
**NRSV "மரியாதை"**
**TEV "சரியான மரியாதை செலுத்தல்"**
**NJB "கவனத்துடன் இருங்கள்"**

இது ஒரு வினையெச்சம் முற்றாகும், அதாவது "தெரிந்து கொள்ளுதல்", "பாராட்டுதல்", "மக்களுக்கு மரியாதை காட்டுதல்", "" மதிப்பை ஏற்றுக்கொள்வது "அல்லது" மதிப்பை அறிதல் "என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. விசுவாசிகள் தேவனால் அழைக்கப்பட்ட தலைமைதத்துவத்திற்கு மரியாதையுடனும் ஏற்ற விதத்திலும் பதிலளிக்க வேண்டும் (ஒ.பா.1 கொரி. 16:18; பிலி. 2:29; 1 தீமோ. 5:17).

**NASB "உங்களிடையே விடாமுயற்சியுடன் பிரயாசப்பட்டு"**
**NKJV, NRSV "உங்களிடையே பிரயாசப்பட்டு"**
**TEV "உங்களிடையே பிரயாசப்படுபவர்களுக்கு"**
**NJB "உங்களிடையே பிரயாசப்பட்டுபவர்கள்"**

"பிரயாசப்படல்" என்பதற்கான இந்த வார்த்தையின் அர்த்தம் "கடுமையான முயற்சி" (ஒ.பா. 1 கொரி. 16:16). இந்த முழு பகுதியும் சபையில் அதன் தலைமை மீதான ஒரு மனப்பான்மைச் சிக்கலைக் குறிக்கிறது.

1. "உங்களிடையே யார் விடாமுயற்சியுடன் பிரயாசப்பட்டுகிறார்கள்" (நிகழ்கால செய்வினையெச்சம்)
2. "உங்கள் மீது பொறுப்பேற்றவர்கள்" (நிகழ்கால இடைவினையெச்சம்)
3. "உங்களுக்கு யார் அறிவுறுத்தல்களை வழங்குகிறார்கள் (நிகழ்கால செய்வினையெச்சம்). இந்த மூன்று விளக்கமான சொற்றொடர்களைத் தொடர்ந்து வரும் கிரேக்க பதங்களில் ஒரு உரிச்சொல் உள்ளது, இந்த வினையெச்சங்கள் அனைத்தும் தலைமைத்துவத்தைக் குறிக்கின்றன.

▣ **" கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து** " இது சொல்லார்தமாக "முன் எழுதப்பட வேண்டும். "அவர்கள் தங்கள் ஊழியத்திற்காக தேவனுக்கு கணக்கொப்புவிப்பார்கள் (ஒ.பா. 1 கொரி. 3: 10-17; எபி. 13:17).

▣ **"உங்களுக்கு அறிவுரை கூறுபவர்களை"** இது சொல்லார்தமாக "அர்த்தமுள்ளதாக" எனப்படுகிறது. இது வழக்கமாக "கட்டுக்கடங்காதவர்களுக்கு அறிவுரை வழங்கல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**5:12-22** பதினைந்து நிகழ்கால கட்டளைகளின் தொடர் வீழ்ந்த உலகில் அழிவின் விளிம்பில் விசுவாசிகளை சரியான முறையில் வாழ வற்புறுத்துகிறது. நம்முடைய தெய்வீக வாழ்க்கை வீழ்ந்த மக்களுக்கு கிறிஸ்துவைக் காட்ட வேண்டும்.

**5:13**
**NASB, NKJV,**
**NRSV "அவர்களை நீங்கள் மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி"**
**TEV "அவர்களை மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் நடத்துங்கள்"**
**NJB "அவர்களிடம் மிகுந்த மரியாதையுடனும் பாசத்துடனும் இருங்கள்"**

சொல்லியல் என்பது தொடர்ச்சியான தனிப்பட்ட செயலை வலியுறுத்தும் வினையெச்ச முற்று ஆகும். வினையுரிச்சொல் என்பது பவுல் மூன்று முறை பயன்படுத்திய மூன்று கூட்டுச் சொல் லாகும் (ஒ.பா. எபே. 3:20; 1 தெச. 3:10). விசுவாசிகள் தங்கள் தலைவர்களை மதிக்க வேண்டும் (ஒ.பா. 1 கொரி. 16:18; பிலி. 2:29; 1 தீமோ. 5:17). சிறப்பு தலைப்பைக் காண்க: கலா. 1:13 இல் ஹூப்பர் கலவைகளை பவுல் பயன்படுத்துகிறார்.

▣ **"அவர்களுடைய கிரியையின் காரணமாக"** தலைமைதத்துவம் என்பது தேவனிடமிருந்து கிடைத்த பரிசாகும் (ஒ.பா. எபே. 4: 11-13). அவர் பணியை நியமிக்கும்போது, அவர் பணியை கனப்படுத்துகிறார், அதைப் பெறுபவரை அவசியமாக இல்லை. 1 தெச 5:13 இல் "வேலை" என்று மொழிபெயர்க்கப்பட்ட சொல் 1 தெச 5:12 ல் உள்ளதைவிட வேறுபட்டது. கடின உழைப்பாளிகளான இந்த தலைவர்கள் குழு வேலை செய்ய மறுத்தவர்களுடன் வேறுபட்டிருக்கலாம் (ஒ.பா. 1 தெச. 5:14 மற்றும் 2 தெச. 3: 6-11)

▣ **"ஒருவரோடு ஒருவர் சமாதானமாக வாழுங்கள்."** இது தொடர்ச்சியான கட்டளைக்கான நிகழ்கால கட்டளை செய்வினையாகும். விசுவாசிகள், மற்றும் ஒரு புதிய ஏற்பாட்டு முறையீடாகும் (ஒ.பா. மாற்கு 9:50; ரோமர் 12:18; 2 கொரி. 13:11). இது சபைகளில் ஒரு பொதுவான பிரச்சினையை பிரதிபலிக்கிறது. கிறிஸ்தவம் என்பது பல வேறுபட்ட பின்னணியிலிருந்த ஆண்களையும் பெண்களையும் கொண்டுள்ளது (ஒ.பா. ரோமர் 14: 1-15: 13; 1 கொரி. 8: 1-13; 10: 23-33).

**5:14 "சகோதரரே"** இந்த வசனம் முதன்மையாக தலைவர்களைக் குறிக்கலாம் (ஒ.பா. 1 தெச. 5:27), ஆனால் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும். இது 1 தீமோத்தேயு 3 க்கும் பொருந்தும். புதிய ஏற்பாடு கிறிஸ்தவம் "மதகுருமார்கள்" மற்றும் "பாமர மக்கள்" ஆகியவர்களுக்கு இடையில் எந்த வேறுபாட்டையும் காட்டவில்லை. நாம் அனைவரும் தேவனால் அழைக்கப்பட்ட, ஆவியானவரால் வரமளிக்கப்பட்ட இயேசுவின் ஊழியர்கள் (ஒ.பா. எபே. 4: 11-13). திறமையான ஊழியர்களின் இந்த குடும்பத்திற்குள் தேவன் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பார்!

**NASB "ஒழுங்கில்லாதவர்களுக்குப் அறிவுறுத்துங்கள்"**
**NKJV "ஒழுங்கில்லாதவர்களுக்குப் எச்சரியுங்கள்"**
**NRSV "வீணர்களுக்கு அறிவுறுத்துங்கள்"**
**TEV "வீணர்களுக்கு எச்சரிக்கவும்"**
**NJB "வீணர்களை எச்சரிக்கவும்"**

இது தொடர்ச்சியான அல்லது பழக்கமான செயலைக் குறிக்கும் நிகழ்கால கட்டளைகளின் தொடரைத் தொடங்குகிறது. 1 தெச 5: 12-22-ல் பதினைந்து

கட்டளைகள் உள்ளன. இது இரண்டு அர்த்தங்களில் ஒன்றைக் கொண்டிருக்கலாம்: (1) ஒழுங்கற்ற நடத்தைக்கான இராணுவ சொல்; அல்லது (2) எகிப்திலிருந்து கொய்ன் கிரேக்க பாபிரியில் "சும்மா இருப்பவர்களுக்கு / வீணர்களுக்கு" பயன்படுத்தப்படுகிறது. பிந்தைய குறிப்பானது இந்த கடிதத்தின் சூழலுக்கு ஏற்றவாறு சிறப்பாக பொருந்துகிறது (ஒ.பா. 2 தெச. 3: 7-16).

**NASB, NRSV "திடனற்றவர்களை ஊக்குவியுங்கள்"**
**NKJV "திடனற்றவர்களைத் தேற்றுங்கள்"**
**TEV "பயந்தவர்களை ஊக்குவிக்கவும்"**
**NJB "பயப்படுபவர்களுக்கு தைரியம் கொடுங்கள்"**

நிகழ்கால இடை கட்டளை (பெயரடை) வசனமாகும், இது உண்மையில், "சிறிய எண்ணம் கொண்டவர்" எனப் பொருள்படும். "கே.ஜே.வி" மொழிபெயர்ப்பின் படி பலவீனமான எண்ணத்தை கொண்ட", ஆனால் இது உண்மையில்" மயக்கம் "அல்லது" சிறிய மனப்பான்மை "என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. ரோமர். 14: 1-15: 13; 1 கொரி. 8; 10: 23-33). இது செப்டுவஜின்ட்டில் ஏசா 35: 4 க்கு ஒரு குறிப்பாக இருக்கலாம்.

▣ **"பலவீனர்களுக்கு உதவுங்கள்"** இந்த நிகழ்கால இடை கட்டளை வசனமானது உடல் மற்றும் / அல்லது மன பலவீனமான பொருளில் பயன்படுத்தப்படுகிறது. ரோமர் 14: 1-15: 13 (அதாவது, 1 கொரி. 8: 7; 9:22) இல் வகைப்படுத்தப்பட்ட அதே வகை கிறிஸ்தவர்களை இது குறிப்பிட்டிருக்கலாம். அல்லது இது ஒரு உடல் சார்ந்தச் சிக்கலைக் குறிக்கலாம்.

▣ **"எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்"** இது நிகழ்கால கட்டளை செய்வினையாகும். இது தொடர்ந்து நீடியபொறுமையுடன் இருக்க வேண்டும், மாறாக குறுகிய கோப மனநிலையுடன் அல்ல (ஒ.பா. 1 கொரி. 13: 4; எபே. 4: 2). இது தலைவர்களுக்கும் மக்களுக்கும் வழிகாட்டப்படுகிறது. ஆரம்பகால சபையின் பிரச்சினைகளுக்கு இது ஒரு விடுதலையைக் கொடுத்தது.

"பொறுமை" என்று மொழிபெயர்க்கப்பட்ட இரண்டு கிரேக்க சொற்கள் உள்ளன: (1) *makrothomia* மக்ரோடோமியா மற்றும் (2) *hupomonē*. ஹுபோமோன். அவை 2 கொரி. 6: 6; கலா 5:22; கொலோ 1:11; 2 தீமோ 3:10. முதல் வசனம் இந்த வசனங்களில் பயன்படுத்தப்படுகிறது. இது தேவனின் ஒரு குணாதிசயத்தைக் குறிக்கலாம் (ஒ.பா. LXX இன் ஏசா 57:15; ரோம். 2: 4; 9:22; 1 பேதுரு 3:20; 2 பேதுரு. 3: 9). விசுவாசிகள் தங்கள் பிதாவின் குணாதிசயத்தை (சாயலை) பின்பற்ற வேண்டும்.

இது பொறுமையுடன் பயன்படுத்தப்படுகிறது (1) ஏதாவது, ஒ.பா. எபி. 6:12; யாக்கோபு 5: 7,8 அல்லது (2) ஒருவர். ஒ.பா. மத் .18: 26,29; 1 கொரி. 13: 1; 1 தெச. 5:14; யாக்கோபு 5:10. இது ஆவிக்குரிய முதிர்ச்சிக்கும் கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கைக்கும் சான்றாகும்.

**5:15 "ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்"** இது இன்னுமொரு நிகழ்கால செயற்பாட்டு நிபந்தனை வாக்கியமாகும் (ஒ.பா. மாற்கு. 5:44; ரோம. 12: 17-21; 1 பேதுரு 3: 9) அவிசுவாசிகளை விட விசுவாசிகள் வேறுவிதமாக பிரதிபலிக்க வேண்டும். விசுவாசிகள் அன்பை காட்ட வேண்டும், கோபத்தை அல்ல. வருத்தமிக்க மற்றும் நேர்மையற்ற சூழ்நிலைகளே செயற்திறன் மிக்க சாட்சியினை காண்பிக்கும் சந்தர்ப்பங்களாகும். 5:15 "ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்" இது இன்னுமொரு நிகழ்கால செயற்பாட்டு நிபந்தனை வாக்கியமாகும் (ஒ.பா. மாற்கு. 5:44; ரோம. 12: 17-21; 1 பேதுரு

3: 9) அவிசுவாசிகளை விட விசுவாசிகள் வேறுவிதமாக பிரதிபலிக்க வேண்டும். விசுவாசிகள் அன்பை காட்ட வேண்டும், கோபத்தை அல்ல. வருத்தமிக்க மற்றும் நேர்மையற்ற சூழ்நிலைகளே செயற்திறன் மிக்க சாட்சியினை காண்பிக்கும் சந்தர்ப்பங்களாகும்.

**NASB "நன்மையானது எதுவோ அதனையே எப்போதும் நாடுங்கள்"**
**NKJV "நன்மையானதையே எப்போதும் தேடுங்கள்"**
**NRSV "எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்"**
**TEV "எப்போதும் நன்மை செய்யவதையே நோக்காக கொண்டிருங்கள்"**
**NJB "எது சிறந்ததோ அதையே சிந்தித்து கொண்டிருங்கள்"**

இந்நிகழ்கால செயற்பாட்டு நிபந்தனை வாக்கியமானது சொல்லார்த்தமாக "தொடர்ந்து நன்மையை நாடுங்கள்" என வழங்குகிறது (ஒ,பா. 1 தெச. 5:21; ரோமர்.12: 9) "நன்மை" எனும் இப்பதமானது, அகத்தோஸ் *agathos* எனவும் பெரும்பாலும் ஒழுக்கமான தகைமையை குறிக்கிறது. ஆனால், "உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும்" எனும் அடுத்த சொற்றொடரானது எவ்வாறு இதனுடன் தொடர்புபடும் என்பது ஆச்சர்யமானதாக ஒருவருக்கு காணப்படலாம். *kalos* கேலோஸ் (நன்மை அல்லது அழகு) எனும் பதம் 1 தெச. 5:21ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கொய்னி கிரேக்கத்தில் இவ்விரு பதங்களுக்கிடையில் பெரிதளவிலான சொற்பொருள் வேறுபாடு காணப்படுகின்றது. வேறுபாடு இருக்க வேண்டியது அவசியமா? இரண்டின் உடனடி பின்னணிகளும் "தீமையை" குறிக்கிறது (ஒ, பா. 1 தெச. 5: 15 அ, 22). வசனம் 15, விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் தொடர்பான கிறிஸ்தவ கிரியையுடன் தொடர்புப்பட்டுள்ளது (யாவருக்கும்). ஆனால் 1 தெச 5:21ல் கிறிஸ்தவ தலைவர்கள் அல்லது வரங்களை ஆராய்வதுடன் தொடர்புப்பட்டுள்ளது. அவை ஒரே தன்மையுடையதானவை என நான் இப்போது கருதுகிறேன். பவுலினுடைய காலத்தில் கொய்னி கிரேக்கத்தில் சொற்தொகுதியும் இலக்கணமும் எளிதான முறையில் காணப்படுகின்றன. காலோஸை குறித்த நல்லதொரு கலந்துரையாடலுக்கு *kalos* see, William Barclay's *New Testament Words* pp. 151-161.

**"உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும்**" இது பெருமளவில் 1 தெச 5:1 மற்றும் 3:12 போன்றவை. தங்களுடைய சுய இலாபத்தை விட சமுதாயத்தின் நன்மையை கருதுபவர்களாய் விசுவாசிகள் காணப்பட வேண்டும். (ஒ.பா. ரோமர் 12:10; 1 கொரி. 12: 7; பிலி. 2: 1-5) அவிசுவாசிகளை நடத்தும் முறையின்படியே விசுவாசிகள் ஏனைய விசுவாசிகளை நடத்துவதும் பொதுமைப்படுத்தப்பட வேண்டும் (ஒ.பா. கலா. 6:10).

**5:16 "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்**" இந் நிகழ்கால செயற்பாட்டு குறியானது பிலிப்பிய புத்தகத்தின் கருப்பொருளாய் இருக்கிறது (ஒ.பா. பிலி. 2:18; 3:1; 4:4,10) இது கிறிஸ்துவுடனான நம்முடைய உறவின் அடிப்படையிலான உலக கண்ணோக்கமாகவும் ஏனைய கிறிஸ்தவர்களுடனான உடன்படிக்கையின் உறவின் அடிப்படையிலானதுமாயிருக்கிறது, சூழ்நிலைகள் அடிப்படையில் அல்ல (ஒ.பா. ரோ. 8:31-39).

**5:17 "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்**" இது இன்னொரு நிகழ்கால நிபந்தனை வாக்கியமாக (செயற்பாட்டு) உள்ளது. ஜெப வாழ்க்கை முறையை, எத்தருணமும் தேவனுடன் ஐக்கியப்பட்டிருப்பதை, குறிப்பதாக இது இருக்கிறது (ஒ.பா. 1 தெச. 1:3; 2:13). பவுல் ஜெபத்துக்கான தேவை இருப்பதை உணர்ந்ததுடன் அது தன்னுடைய

ஊழியத்தில் தாக்கதை ஏற்படுத்துகிறது என்பதை நம்பினார். (ஒ.பா. 1 தெச. 5:25; எபே. 6:18-19; 2 தெச. 3:1).

**5:18**

**NASB, NKJV "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்"**
**NRSV "எல்லா சூழ்நிலைகளிலும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்"**
**TEV "எல்லா சூழ்நிலைகளிலும் நன்றியுள்ளவர்களாய் இருங்கள்"**
**NJB "எல்லாவற்றிலேயும் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துங்கள்"**

இது இன்னொரு நிகழ்கால நிபந்தனை வாக்கியமாகும். சூழ்நிலைகள் நம்முடைய நன்றிநவிழ்தலயோ அல்லது மகிழ்ச்சியையோ ஆளுகை செய்யகூடாது (ஒ.பா. ரோ. 8:26-30, 31-39; எபே. 5:20) கலா 6:18 ல் விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: பவுலினுடைய துதி, ஜெபம், நன்றிநவிழ்தல், 1 தெச 1:2ல் விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: நன்றிசெலுத்துதல்.

▣**"தேவனுடைய சித்தம்"** எபே 5:17ஐ போலவே இது சொல்லர்த்தமாக "தேவனுடைய சித்தம்" என பொருள்படும். விழுந்து போன மனிதகுலமானது கிறிஸ்துவை விசுவசிக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாய் இருக்கிறது (ஒ.பா. யோவான் 6:29) இதற்கு பின்பு தேவனுடைய "சித்தங்கள்" அநேகம் உண்டு. ஒன்று சந்தோஷமாயிருப்பது மற்றும் உபாத்திரவத்திலும் பிரச்சினையிலும் நன்றி செலுத்துதல். 1 தெச 4:3ல் விசேஷித்த தலைப்பை பார்க்கவும்.

**5:19**
**NASB, NKJV, NRSV "ஆவியை அவித்துப்போடாதிருங்கள்"**
**TEV "பரிசுத்த ஆவியை தடுக்க வேண்டாம்"**
**NJB "பரிசுத்த ஆவியை தடுக்க முயற்சிக்க வேண்டாம்"**

19-20 வரையான வசனங்கள் எதிர்மறையான பகுதியை கொண்ட நிகழ்கால செயற்பாட்டு நிபந்தனை வாக்கியமாகும். பொதுவாக ஒரு கிரியையை செயற்பாட்டின் போது இடைநிறுத்துவதை குறிக்கிறது. வில்லியம் மொழிபெயர்ப்பு "ஆவியை தணியச்செய்வதை நிறுத்துங்கள்" என குறிப்பிடுகிறது. 1 தெச 5:19,22ல் உள்ள ஐந்து நிபந்தனைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்ந்து செல்கிறது. 1 தெச 5:19, 20 ல் உள்ள முதல் இரண்டு எதிர்மறை நிபந்தனைகளும் 1 தெச 5:21-22 வரையுள்ள நேர்மறை நிபந்தனைகளுக்கு வரையறை அளிக்கிறது. அவித்துப்போடுதல் என்பது "நெருப்பினை அனைத்தல்" என்பதை குறிக்கிறது. எங்களுடைய கிரியைகள் ஆவியினுடைய செயற்பாட்டினை பாதிக்கிறது (ஒ.பா. ஏசா. 63:10; எபே. 4:30).

**SPECIAL TOPIC: THE PERSONHOOD OF THE SPIRIT**
**சிறப்பு தலைப்பு: ஆவியின் ஆள்தத்துவம்**

1. பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டில், "தேவனின் ஆவி" (அதாவது, ருவாஹ) என்பது YHWH இன் நோக்கத்தை நிறைவேற்றிய ஒரு வல்லமையாகும் (சிறப்பு தலைப்பு: வேதாகமத்தில் ஆவி), I., ஆனால் அது ஆள்தத்துவமானது என்பதற்கான சிறிய குறிப்புகளே காணப்படுகின்றன (ஒ.பா. ஏசா 48:16; 61: 1).

2. புதிய ஏற்பாடு

இருப்பினும், புதிய ஏற்பாட்டில் (சிறப்பு தலைப்பு: வேதாகமத்தில் ஆவி), II., III., IV. ஆவியின் முழு ஆளுமையும் ஆள்தத்துவமும் வெளிப்படுகிறது:

1. அவரை நிந்திக்க முடியும் (ஒ.பா. மத். 12:31; மாற்கு 3:29)
2. அவர் கற்பிக்கிறார் (ஒ.பா. லூக்கா 12:12; யோவான் 14:26)
3. அவர் சாட்சி கொடுக்கிறார் (ஒ.பா. யோவான் 15:26)
4. அவர் எமக்கு உணர்த்துகிறார் , வழிகாட்டிகள் (ஒ.பா. யோவான் 16: 7-15)
5. அவர் "யார்" என்று அழைக்கப்படுகிறார் (அதாவது, ஹோஸ், ஒ.பா. எபே. 1:14)
6. அவர் துக்கப்படலாம் (ஒ.பா. எபே. 4:30)
7. அவரைத் தணிக்க முடியும் (ஒ.பா. 1 தெச. 5:19)
8. அவரை எதிர்க்க முடியும் (ஒ.பா. அப்போஸ்தலர் 7:51)
9. அவர் விசுவாசிகளுக்காக வாதிடுகிறார் (ஒ.பா. யோவான் 14:26; 15:26; 16: 7)
10. அவர் குமாரனை மகிமைப்படுத்துகிறார் (நற். யோவான் 16:14)

திரித்துவ எழுத்தாக்கங்கள் (இங்கே பலப் பகுதிகளிலிருந்து மூன்று கொடுக்கப்பட்டுள்ளது, முழு பட்டியலைக் காண்க சிறப்பு தலைப்பு: திரித்துவம்) மூன்று நபர்களைப் பற்றியும் பேசுகிறது.

1. மத். 28:19
2. 2 கொரி. 13:14
3. 1 பேது. 1: 2

ஸ்பிரிட்" (நியூமா) என்ற கிரேக்க வார்த்தை ஆவியைக் குறிக்கும் போது நடுநிலையானது, ஆனால் புதிய ஏற்பாட்டில் பெரும்பாலும் ஆண்பால் சுட்டுப் பெயரடையைப் பயன்படுத்துகிறது, இது ஒரு நபரைக் குறிக்கிறது என்பதைக் குறிக்கிறது (உதாரணமாக, யோவான் 16: 8,13-14)

ஆவி மனித செயல்பாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

1. அப்போஸ்தலர் 15:28

2. ரோம். 8:26

3. 1 கோரி 12:11

4. எபே 4:30

3. அப்போஸ்தலர் நடப்படிகள் குறிப்பாக

ஆரம்பத்தில் அப்போஸ்தலர் நடப்படியில், ஆவியானவரின் பங்கு வலியுறுத்தப்படுகிறது (யோவானின் நற்செய்தியைப் போல). பெந்தெகொஸ்தே ஆவியானவரின் கிரியையின் ஆரம்பம் அல்ல, மாறாக ஒரு புதிய அத்தியாயம். எப்போதும் இயேசுவுக்கு ஆவி இருந்தது. அவருடைய ஞானஸ்நானம் ஆவியானவரின் கிரியையின் ஆரம்பம் அல்ல, மாறாக ஒரு புதிய அத்தியாயம். பிதாவின் சாயலில் உருவாக்கப்பட்ட எல்லா மனிதர்களையும் மீட்டெடுப்பதற்கான தந்தையின் நோக்கத்தின் சிறந்த வழிமுறையாக ஆவியானவர் இருக்கிறார். (சிறப்புத் தலைப்பைப் பார்க்கவும்: YHWH இன் நித்திய மீட்பின் திட்டம்)! இது திரித்துவத்தின் மூன்றாவது நபரான ஆவியானவரின் காலம்.

4. இறையியல் உருவாக்கம்

திரித்துவம் என்பது வேதாகாமப் பொருளால் தெறிவிக்கப்பட்ட வரலாற்று ரீதியாக உருவாக்கப்பட்ட ஒரு உருவாக்கம் ஆகும்.

1. பிதாவிற்கு சமமான இயேசுவின் முழுமையான தெய்வீகத்தன்மை கி.பி. 325 இல் நைசியா மாநாட்டினாள் உறுதிப்படுத்தப்பட்டது (ஒ.பா. யோவான் 1: 1; பிலி. 2: 6; தீத்து 2:13)

2. பிதாவுக்கும் மகனுக்கும் சமமான ஆவியின் முழு ஆள்தத்துவதையும் தெய்வீகத்தன்மையையும் கி.பி. 381 இல் கான்ஸ்டான்டினோபிள் மாநாட்டினாள் உறுதிப்படுத்தப்பட்டது

3. திரித்துவத்தின் கோட்பாடு அகஸ்டினின் (De Trinitate) டி டிரினிடேட் படைப்பில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது இங்கே உண்மையிலேயே ஒரு மறைப்பொருள் உள்ளது. ஆனால் புதிய ஏற்பாடு ஒரு தெய்வீக சாரத்தை உறுதிப்படுத்துகிறது (சிறப்பு தலைப்பு: ஏகதெய்வவழிபாடு) மூன்று நித்திய தனிப்பட்ட வெளிப்பாடுகளுடன் (பிதா,குமாரன் மற்றும் ஆவி; சிறப்பு தலைப்பு: திரித்துவம் பார்க்கவும்).

Copyright © 2014 Bible Lessons International

**5:20**

**NASB "தீர்க்கதரிசன வார்த்தைகளை அற்பமாயெண்ணாதிருங்கள்"**
**NKJV "தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள்"**
**NRSV "தீர்க்கதரிசன வார்த்தைகளை அற்பமாயெண்ணாதிருங்கள்"**
**TEV "வெளிப்பாடுகளான வார்த்தைகளை அற்பமாயெண்ணாதிருங்கள்"**
**NJB "தீர்க்கதரிசன வரத்தை அலட்சியமாக கருதவேண்டாம்"**

தீர்க்கதரிசனத்தின் வரைவிலக்கணமானது புதிய ஏற்பாட்டில் பெரிதாக விவாதிக்கப்பட்டதாயுள்ளது. 1 கொரி 12:28-29 மற்றும் எபே :11ல் இவ்வரமானது ஆவியின் வரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தை எழுதிய தீர்க்கதரிசிகள், அப்போஸ்தல காலத்துக்கு பின்னான தீர்க்கதரிசன வரத்துடன் எவ்வாறு தொடர்புபடுகிறார்கள் என்பது நிச்சயமற்றதாக உள்ளது. அநேக அறிஞர்கள் அருளுதலை/வெளிப்பாட்டினை புதிய ஏற்பாட்டுடன் மட்டுப்படுத்த விரும்புகிறார்கள் (ஒ.பா.3,20)

புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுடன் தெளிவாக இணைந்து போகவில்லை. புதிய ஏற்பாட்டு வரங்கள் பெரும்பாலும் பிரயோகரீதியான பிரச்சினைகளுடன் தொடர்புப்பட்டதாயிருக்கிறது, புதிய மறைபொருளான தகவலுடனல்ல. எவ்வாறாயினும் முன்னறிவிப்பின் அம்சமானது அப்போ 11:27-30 மற்றும் 21:10-11ல் காணப்படுகிறது. 1 மற்றும் 2 கொரிந்தியரில் தீர்க்கதரிசனமும் தீர்க்கதரிசனம் உரைத்தலும் (ஒ.பா. 1 கொரி. 13:1; 14:1,39) சுவிசேஷத்தினை பிரசித்தப்படுத்துவதாக பொருள்படுத்துகிறது. பிரசித்தப்படுத்தலானது அப்போஸ்தலர், தீரிக்கதரிசிகள், சுவிசேஷர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்களுக்கிடையில் எவ்வாறு வேறுபடுகின்றது என்பது உறுதியற்றதாக இருக்கிறது.

வசனம் 20 ஆனது ஒரு வகையில் 1 தெச 5:19உடன் தொடர்புபட்டதாய் இருக்கிறது. தெசலோனிக்கேய சபைக்கு எவ்வாறு சரியாக பொருந்துகிறது என்பது நிச்சயமற்றது. விசுவாசிகள் மும்முரத்துடன் கள்ள போதகர்களை நிராகரித்ததுடன், தெய்வபக்தியுள்ள தலைவர்களை உற்சாகமாய் ஏற்றுக்கொள்கிறார்கள்.

**5:21**

**NASB "எல்லாவற்றையும் கவனமாய் சோதித்துப்பாருங்கள்"**
**NKJV "எல்லாவற்றையும் சோதித்துப்பாருங்கள்"**
**NRSV "எல்லாவற்றையும் சோதித்துப்பாருங்கள்"**
**TEV "எல்லாவற்றையும் சோதனைக்கு உட்படுத்துங்கள்"**
**NJB "எதனையும் செய்வதற்கு முன்பு செய்யுங்கள்"**

இது நிகழ்கால செயற்பாட்டு குறியாகும். இது சொல்லார்த்தமாக "மற்றும் எல்லாவற்றையும் சோதித்தறியுங்கள்" என பொருள்படும். பின்னணியின் அடிப்படையில் இது (1) சபை தலைவர்கள், (2) ஆவியின் கொடைகள் (3) ஒரு ஆவிக்குரிய செய்தி, அல்லது (4) உபதேசம் என பொருள்படும். பின்வரும் வார்த்தையான (*dokimazō,* 1 தெச. 3:5ல் விசேஷித்த தலைப்பை பார்க்கவும்) என்பது

"அங்கீகாரம் அளிப்பதற்கான நோக்கத்துடன் சோதித்தறிதல்" என பொருள்படும் (ஒ.பா. 1 கொரி. 12:10; 14:29; 1 யோவான்4:1ff.) சில விடயங்கள் ஆவிக்குரியதாய் தோன்றும், ஆனால் உண்மையில் அப்படியல்ல (ஒ.பா. மத். 7:21-23; கொலோ. 2:16-23).

**SPECIAL TOPIC: JUDGMENT IN THE NT**
**சிறப்பு தலைப்பு: புதிய ஏற்பாட்டில் நியாய தீர்ப்பு**

தெய்வீக நியாய தீர்ப்பு நிச்சயம் (ஒ.பா. மத். 12:36; எபி. 9:27; 10:27; 2 பேதுரு 2: 4.9; 3: 7).

1. நியாயதீர்ப்பளிப்பவர் (சிறப்பு தலைப்பைக் காண்க: ஏசாயாவில் நியாயாதிபதி, நியாயதீர்ப்பு மற்றும் நீதி
   1. தேவன் (ஒ.பா. ரோமர் 2: 2-3; 14: 10,12; 1 பேது. 1:17; 2:23; வெளி 20: 11-15)
   2. கிறிஸ்து (ஒ.பா. யோவான் 9:39; மத் 16:27; 25: 31-46; அப்போஸ்தலர் 10:42; 17:31; 2 கொரி. 5:10; 2 தீமோ. 4: 1)
   3. பிதா குமாரன் மூலமாக (ஒ.பா. யோவான் 5: 22-27; அப்போஸ்தலர் 17:31; ரோமர் 2:16)
2. நியாயதீர்ப்பு ஒரு விரும்பத்தகாத பொருளாகும், ஆனால் வேதாகமத்தில் இது மீண்டும் மீண்டும் வரும் ஒரு கருப்பொருளாகும். இது பல அஸ்திபார வேதாகம உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது.
   1. இது ஒரு நெறிமுறையுள்ள தேவனால் உருவாக்கப்பட்ட ஒரு அறமிக்க பிரபஞ்சம் (நாம் விதைத்ததை அறுவடை செய்கிறோம், ஒ.பா. கலா. 6: 7).
   2. மனிதநேயம் வீழ்ந்தது; நாங்கள் முரட்டாட்டம் செய்தோம்.
   3. தேவன் விரும்பிய உலகம் இதுவல்ல.
   4. அனைத்து உணர்வுள்ள சிருஷ்டிப்புகளும் (தேவதூதர்களும் மனிதர்களும்) தங்கள் சிருஷ்டிகருக்கு கணக்கொப்புவிக்கும் முகமாக தமது ஜீவனைப் பரிசாகக் கொடுக்க வேண்டும். நாங்கள் உக்கிராணக்காரர்கள்.
   5. நித்தியம் என்பது இந்த வாழ்க்கையில் நம்முடைய செயல்களாலும் தேர்வுகளாலும் நிரந்தரமாக தீர்மானிக்கப்படும்.
3. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் தீர்ப்பிட முடியுமா? இந்த சிக்கலை இரண்டு வழிகளில் கையாள வேண்டும்.
   1. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் நியாயந்தீர்க்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள் (ஒ.பா. மத் 7: 1-5; லூக்கா 6: 37,42; ரோமர் 2: 1-11; யாக்கோபு 4: 11-12)

2. தலைவர்களை மதிப்பீடு செய்ய விசுவாசிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள் (ஒ.பா. மத் 7: 6,15-16; 1 கொரி. 14:29; 1 தெச. 5:21; 1 தீமோ. 3: 1-13; 1 யோவான் 4: 1-6) சரியான மதிப்பீட்டிற்கான சில அளவுகோல்கள் உதவியாக இருக்கும்.

1. மதிப்பீடு செய்தல் என்பது உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக இருக்க வேண்டும் (ஒ.பா. 1 யோவான் 4: 1 - ஒப்புதலுக்கான நோக்குடன் "சோதனை"; சிறப்பு தலைப்பு: சோதித்தல் (பீராஸ் மற்றும் டோக்கிமாஸ்) (*peirazō* and *dokimazō*)ஐப் பார்க்கவும்

2. மதிப்பீடு பணிவு மற்றும் மென்மையுடன் செய்யப்பட வேண்டும் (ஒ.பா. கலா. 6: 1)

3. மதிப்பீடு தனிப்பட்ட விருப்பத்தேர்வுகளில் கவனம் செலுத்தக்கூடாது (ஒ.பா. ரோமர் 14: 1-23; 1 கொரி. 8: 1-13; 10: 23-33)

4. மதிப்பீடு சபையிலிருந்தோ அல்லது சமூகத்தினரிடமிருந்தோ "கண்டனங்களை கையாலாத" தலைவர்களை அடையாளம் காண வேண்டும் (ஒ.பா.1 தீமோத்தேயு 3)

Copyright © 2014 Bible Lessons International

▣**"நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்"** "பிடித்துக்கொள்ளுங்கள்" என்பது இன்னுமொரு நிகழ்கால செயற்பாட்டு குறியாகும். இது சோதித்தறிந்த விடயங்களுடன் தொடர்புடையதாய் காணப்படுகின்றது. இது கிரேக்க பதமான *kalos*ஐ குறிக்கிறது (நல்லது அல்லது அழகானது), 1 தெச 5:15 ல் காணப்படுகின்ற *agathos* அல்ல.

**5:22 "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்**" "விட்டு விலகுங்கள்" என்பது நிகழ்கால இடைநிலை குறியாகும். "பொல்லாங்கு" என்பது ஆண்பால் அல்லது அஃறிணையாக இருக்கலாம். இது மத் 6:13ல் உள்ள வசனங்களுடன் முரண்பாட்டை தோற்றுவிக்கிறது, ஏனெனில் வசனமானது சாத்தான் அல்லது பொல்லாங்கு என்பதை பொதுவாக பொருள்படுத்தலாம். இப்பின்னணியின் படி இது பொல்லாதவர்களையோ அல்லது பொல்லாங்கினையோ பொதுவாக குறிக்கலாம். 1வது தெசலோனிக்கேயரில் கள்ள உபதேசகர்களை குறித்து வலியுறுத்தப்படவில்லை, ஆகையால், இது பெரும்பாலும் 1 தெச 5:21ல் காணப்படும் "நன்மை" என்பதுடன் பொதுவான ஒப்பனையாக இருக்கிறது.

எல்லாவிதமான என்கிற சொற்றொடரை இரண்டு விதங்களில் புரிந்துகொள்ளலாம் (1) KJV, லூக்கா 9:29ல் காணப்படுவது போல "பொல்லாப்பின் எல்லா விதமான தோற்றங்கள்" என மொழிபெயர்க்கிறது இதுவும் ஆதி சபை பிதாக்கள் இப்பதத்தை புரிந்துகொண்ட வழியாகும். (2) Didache டிடாகே 3:1 இப்பதத்தை "எல்லா பொல்லாப்புக்கும், வெளித்தோற்றத்தில் மாத்திரமல்ல, ஆனால் உண்மையான பொல்லாங்கு" என பொதுவான வரைவிலக்கணத்தில் பயன்படுத்துகிறது.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 5: 23-24**

**[23] சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. [24] உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.**

**5:23 "சமாதானத்தின் தேவன் தாமே"** இது, பவுலின் நிருபங்களில் பொதுவான முடிவுரையாய் காணப்படுகின்றது. (ஒ.பா. ரோ. 15:33; 16:20; 2 கொரி. 13:11; பிலி. 4:6; 2 தெச. 3:16) தெய்வத்துக்கு என்னவொரு ஆச்சர்யமான, விளக்கமான தலைப்பு!

▣**"பரிசுத்தமாக்குவாராக..... காக்கப்படுவதாக"** இவை இரண்டும் இறந்தகால வியங்கோள் ஆகும், வாழ்த்துதல் அல்லது ஜெபித்தல் ஆகிய மனப்பாங்கை கொண்டுள்ளதினை குறிக்கும். விசுவாசிகள் தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டு காக்கப்படுவார்களாக என பவுல் ஜெபிக்கிறார். இது, பரிசுத்தமாக்கப்படுத்தலானது இரட்சிப்பின் பரிசு மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கை என்பதை காண்பிக்கின்றது. விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: 1 தெச 4:3ல் புதிய ஏற்பாட்டில் பரிசுத்தம்/பரிசுத்தமாக்கப்படல்.

▣**"உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக**" இவ்வாக்கியத்தில் இரண்டு கிரேக்க பெயரடை சொற்களான "முற்றிலும்" மற்றும் "முழுவதும்" என்பவை மூன்று பெயர்ச்சொற்களான, "ஆவி, ஆத்துமா, சரீரம்," என்பவற்றுடன் இணைந்து மனிதனுடைய முழுமையான தன்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது, திரித்துவ தேவனை போல மனிதன் முப்பிரிப்புள்ள தன்மையுடையவனல்ல என்பதையும் காண்பிக்கின்றது. லூக்கா 1:46-47 ல் இணைப்போக்கானது ஆத்துமா மற்றும் ஆவியானது ஒத்த பொருளுடையதாய் காட்டுகின்றது. மனிதர்களுக்கு ஆவி இல்லை - அவர்கள் ஆவியாய் இருக்குகிறார்கள் (ஒ.பா. ஆதி. 2:7) இச்சொற்றொடரானது விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது (ஒ.பா. மத். 5:48; எபே. 1:4).

▣**"உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், காக்கப்படுவதாக**" இது மனிதனின் இருப்பியல் முப்பிரிவினை நிரூபிக்கும் வசனமல்ல. (மனிதர்கள் தேவனை போல திரித்துவ தன்மையடையவர்களல்ல), ஆனால் இப்பூமிக்கும் தேவனுக்குமிடையில் மனிதர்கள் இரட்டை வழியான உறவினை கொண்டிருக்கிறார்கள். ஆதியாகமத்தில் மனிதர்களுக்கும் மிருகங்கங்களுக்கும் எபிரேய சொல்லான நெபேஷ் *nephesh* எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (ஒ.பா. ஆதி. 1:24; 2:19) “ஆவி” (*ruah*) (ருவாஹ்) தனித்துவமாக மனிதனுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (ஜீவ சுவாசம்). எபி 4:12 இணை போலவே, இது மனித தன்மையானது மூன்று பிரிவுள்ளது (ட்ரைக்கோடோமஸ்) என்பதை நிரூபிக்க கூடிய வசனமல்ல. மனித குலமானது வேதாகமத்தில் ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது (ஒ.பா. ஆதி. 2:7). மனிதனுடைய இரட்டை பிரிவு, முப்பிரிவு, அல்லது ஒரு ஐக்கியம் என்பவற்றை குறித்து நல்லதொரு உரைச்சுருக்கத்தினை அறிய Millard J. *Erickson's Christian Theology* (second edition) pp. 538-557 and Frank Stagg's *Polarities of Man's Existence in Biblical Perspective* இணை வாசிக்கவும்.

▣**"குற்றமற்றதாயிருக்கும்படி"** இப்பதமானது புதிய ஏற்பாட்டில் இங்கு மாத்திரமே காணப்படுகின்றது. இது தெசலோனிக்கேயாவின் கல்வெட்டுக்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குற்றம் அல்லது பழி என்பவற்றிலிருந்து விலகியிருத்தலை குறிக்கும், ஆகையால், ஒழுக்கத்தில் பரிசுத்தமாயிருத்தல். இது பெரும்பாலும் பழைய ஏற்பாட்டின் "குற்றமற்ற", பழுதுகளற்ற, எனும் பதத்தினை வெளிப்படுத்துவதாக இருக்கலாம், ஆகையால் பலிசெலுத்துதலுக்கு உகந்தவையானவை. 1 தெச 2:10ல் விசேஷித்த தலைப்பை பார்க்கவும்.

▣**"நம்முடைய கர்த்தருடைய வருகையின் போது"** இது, இம்முழு புத்தகத்தின் இறையியல் நோக்கமாயிருக்கிறது, இரண்டாவது வருகை (ஒ.பா. 1 தெச. 1:10; 2:19; 3:13; 4:13-15:11; 5:23) விசேஷித்த தலைப்பை பார்க்கவும்: 1 தெச 2:19 மற்றும் 3:13ல் இயேசுவின் வருகை.

**5:24 "உண்மையுள்ளவர்"** இது இரண்டாவது விளக்கமுறைசார் தலைப்பு (ஒ.பா. உபா. 7:9; ஏசா. 49:7; 1 கொரி. 1:9; 10:13; 2 கொரி. 1:18; 2 தெச. 3:3) மற்றும் யாஹாவேஹேயினுடைய குணாதிசயம் (ஒ.பா. சங். 36:5; 40:10; 89:1,2,5,8; 92:2; 119:90) என இரண்டாகவும் செயற்படுகிறது. விசுவாசிகளின் நம்பிக்கையானது யாஹாவேஹேயினுடைய நிலைநாட்டப்பட்ட, தீர்க்கமான, மாறாத குணாதிசயமாகும் (ஒ.பா. மல்கியா 3:6).

▣ **"அழைக்கிறவர்..... அவர் அப்படியே செய்வார்".** இது மூன்றாவது விளக்கமுறைசார் தலைப்பு, "அழைக்கிறவர்", பிதாவாகிய தேவனையும் குறிக்கிறது (ஒ.பா. 1 தெச. 2:12; 4:7). இவ்வசனமானது விசுவாசிகளின் தெரிந்துகொள்ளுதலையும், கூடவே மகிமைப்படுத்தலையும் குறிக்கிறது (ஒ.பா. ரோமர். 8:29-34) தொடங்குகிறவரும் நிறைவு செய்கிறவருமாகிய உண்மையுள்ள தேவனில் இது கவனம் செலுத்துகிறது (ஒ.பா. பிலி. 1:6; 2:13). எங்களுடைய நம்பிக்கையானது தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்கிற அவருடைய உண்மைதன்மையிலேயே தங்கியுள்ளது.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 5: 25**

**25 சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.**

**5:25 "எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்"** பவுல் ஜெபத்துக்கான ஒரு தேவையை உணர்ந்தார் (ஒ.பா. ரோ. 15:30; எபே. 6:18-19; கொலோ. 4:3-4; பிலி. 1:19) ஜெபமானது எவ்வாறேனும் செயல்திறமிக்க ஊழியத்துக்கு தேவையான தேவனுடைய வல்லமையை அளிக்கிறது. பேரரசராகிய தேவன், தன்னுடைய பிள்ளைகளின் ஜெபத்திற்காக, சில பகுதிகளில் தன்னை கட்டுப்படுத்தி வைத்துள்ளார் (ஒ.பா. யாக்கோபு 4:2). இது, கிறிஸ்தவர்களாக நம் ஒவ்வொருவர் மேலும் எவ்வளவு பொறுப்பினை சுமத்துகின்றது. 1 தெச 1:12 ல் விசேஷித்த தலைப்பை பார்க்கவும : பரிந்து பேசும் ஜெபம்.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 5: 26-27**

**26 சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள். 27 இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்படும்படி செய்யவேண்டுமென்று கர்த்தர்பேரில் ஆணையிட்டு உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**5:26 "பரிசுத்த முத்தம்"** "யாருக்கு", "எங்கே" மற்றும் "எப்போது" ஆதி திருச்சபை இவ்வகையான வாழ்த்துதலை பயன்படுத்துகிறது என்பது நிச்சயமற்றதாக காணப்படுகின்றது. பிற்காலத்தில், ஆண்கள் ஆண்களையும் பெண்கள் பெண்களையும் கன்னத்தில் முத்தமிட்டனர் (ஒ.பா. ரோ. 16:16; 1 கொரி. 16:20; 2 கொரி.13:23; 1 பேதுரு. 5:14), புறமதத்தவரின் தவறான புரிந்துகொள்ளுதலினால் பரிசுத்த முத்தமானது தொடரப்படவில்லை.

இது அவர்கள் கலாச்சாரத்தின் அன்பு, ஆதரவு மற்றும் சமுதாயத்தின் அடையாளமாக காணப்பட்டது. நம்முடைய காலத்தில் அமெரிக்க கலாச்சாரத்தில், அணைத்தல் அல்லது கைலாகு கொடுத்தல் இவ்வகையாக தொழிற்படுகிறது. இது நம்முடைய ஐக்கியத்தை தெரியப்படுத்தும் அடையாளமாக இருக்கிறது!

**5:27** இவ்வசனம் தலைவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது. பவுலினுடைய நிருபங்கள் பொதுவாக வாசிப்பதற்கு எழுதப்பட்டு (ஒ.பா. கொலோ. 4:16) பிற்பாடு ஏனைய சபைகளுக்கிடையில் பரிமாற்றப்படும். தன்னுடைய நிருபங்கள் மூல பின்னணிக்கு காலத்துக்கும் அப்பாற்பட்டது என்பதை பவுல் அறிந்திருந்தார்.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 5: 28**

**[28]நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக.**

**5:28** நிருபத்தினை உறுதிப்படுத்துவதற்காக பவுல் இதனை தானே எழுதியிருக்க கூடும் (ஒ.பா. 2 தெச. 3:17-18)

**கலந்துரையாடல் கேள்விகள்**

இது ஒரு ஆய்வு வழிகாட்டி வியாக்கியானவியலாகும். அதாவது வேதாகமத்தைப் பற்றிய உங்கள் சொந்த விளக்கத்திற்கு நீங்களே பொறுப்பு. நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருக்கும் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். நீங்கள், வேதாகமம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மொழிபெயர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இதை நீங்கள் ஒரு வியாக்கியானவியலாளரிடம் விட்டுவிடக்கூடாது.

புத்தகத்தின் இந்த பகுதியியை இதன் முக்கிய பிரச்சினைகள் மூலம் சிந்திக்க உதவும் வகையில் இந்த விவாத கேள்விகள் வழங்கப்படுகின்றன. அவை உறுதியானவை அல்ல, சிந்தனையை தூண்டக்கூடியவை.

1. இயேசுவின் வருகைக்கான திகதியை நிர்ணயிக்க நாம் முயற்சிக்கலாமா? ஏன்?
2. "கர்த்தருடைய நாள்" இச்சொற்றொடரை விளக்குக
3.இரண்டாம் வருகையானது ஏன் (1) இரவில் திருடன்; மற்றும் (2) பிரசவ வேதனைப்படும் பெண் ஆகியவற்றால் விளக்கப்படுகிறது
4. கிறிஸ்தவ சர்வாயுதவர்க்கம் வேதாகமத்தில் வேறு எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?
5. இவற்றில் விசுவாசிகளுக்கு எழுதப்பட்ட வசனங்கள் யாவை? தலைவர்களுக்கு எழுதப்பட்ட வசனங்கள் யாவை?
6. இவ்வதிகாரத்தில் தெசலோனிக்கேயாவின் பின்னணி எப்படிப்பட்டதாக இருக்கலாம்?

7. இவ்வதிகாரத்தில் அதிகளவில் "நிகழ்கால நிபந்தனைகள்" காணப்படுவதன் காரணம் யாது? இவ் இலக்கண வடிவமைப்பு நமக்கு தெரிவிப்பது யாது?

Copyright © 2013 Bible Lessons International